தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### இயற்கை வேளாண் விஞ்ஞானி நம்மாழ்வார் காலமானார்



தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை அருகே இயற்கை வேளாண் விஞ்ஞானி கோ. நம்மாழ்வார் (76) உடல்நலக் குறைவு காரணமாக திங்கள்கிழமை (டிச. 30) இரவு காலமானார்.

காவிரி டெல்டா மாவட்டங்களில் மிகுந்த பாதிப்பை ஏற்படுத்துவதாகக் கருதப்படும் மீத்தேன் வாயு எடுக்கும் திட்டத்தைக் கண்டித்து அவர் தொடர்ந்து போராட்டங்கள் நடத்தி வந்தார். கடந்த சில நாள்களாக மீத்தேன் வாயு திட்டம் செயல்படுத்தப்படவுள்ளதாகக் கூறப்படும் கிராமங்களில் மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக பிரசாரம் மேற்கொண்டு வந்தார்.

இந்நிலையில், அவர் உடல்நலக் குறைவு காரணமாக அண்மையில் பாதிக்கப்பட்டார். தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை அருகேயுள்ள பிச்சினிக்காடு கிராமத்தைச் சேர்ந்த பேரழிப்புக்கு எதிரான பேரியக்க ஒருங்கிணைப்பாளர் கே.கே.ஆர். லெனின் வீட்டில் தங்கியிருந்த நம்மாழ்வார் திங்கள்கிழமை இரவு காலமானார்.

இவர் தஞ்சாவூர் மாவட்டம், பூதலூர் அருகேயுள்ள இளங்காடு கிராமத்தைச் சேர்ந்தவர். அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் பி.எஸ்ஸி. (விவசாயம்) பட்டம் பெற்றார். கோவில்பட்டியில் உள்ள வேளாண் மண்டல ஆய்வு நிலையத்தில் 1963 ஆம் ஆண்டில் ஆய்வு உதவியாளராகப் பணியில் சேர்ந்தார். அங்கு தொடர்ந்து 6

ஆண்டுகளாகப் பணியாற்றிய அவர் வேளாண்மையில் பயன்படுத்தப்படும் ரசாயன உரம், ரசாயன பூச்சிக் கொல்லி பயன்பாட்டுக்கு எதிர்ப்பு தெரிவித்து பணியிலிருந்து விலகினார்.

தொடர்ந்து, வேளாண்மையில் வீரிய மிக்க விதைகள், ரசாயன உரம், பூச்சிக்கொல்லி பயன்பாட்டுக்கு எதிராகவும், இயற்கை வழி வேளாண்மையை வலியுறுத்தியும் விழிப்புணர்வு பிரசாரம் செய்து வந்தார்.

மேலும், பசுமைப் புரட்சி, நிலச்சீர்திருத்தம், சுற்றுச்சூழல் பாதுகாப்பு தொடர்பாக கடுமையான விமர்சனங்களையும், ஆக்கபூர்வமான மாற்றுக் கருத்துகளையும் நம்மாழ்வார் முன் வைத்தார்.

ஈரோடு மாவட்டத்தில் இயற்கை விவசாயம் குறித்து மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக 2002 ஆம் ஆண்டில் நடைபயணம் மேற்கொண்டார். பின்னர், 2003 ஆம் ஆண்டில் பூம்புகாரிலிருந்து கல்லணை வரையும், புதுக்கோட்டையிலும் நடைபயணம் சென்றார்.

இதுபோல, வாழ்நாள் இறுதிவரை அவர் மக்கள் நலனுக்காகவும், சுற்றுச்சூழலைக் காக்கவும், இயற்கை விவசாயத்தை மக்களிடையே கொண்டு செல்வதற்காகவும் பாடுபட்டு வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

### பவானிசாகர் அணை நீர்மட்டம் 55.91 அடி

பவானிசாகர் அணை நீர்மட்டம் திங்கள்கிழமை நிலவரப்படி 55.91 அடியாக இருந்தது.

அணைக்கு விநாடிக்கு 507 கனஅடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 1,150 கன அடி நீரும், வாய்க்காலில் 2,000 கன அடி நீரும் திறந்துவிடப்பட்டது.

அணையில் நீர் இருப்பு 6.01 டி.எம்.சி.

### நத்தம் பகுதியில் கரும்பு விலை கடும் உயர்வு

நத்தம் சுற்று வட்டார பகுதிகளில் கரும்பு அதிக அளவில் பயிரிடப்பட்டு வருகிறது. ஆனால் போதிய மழை இல்லாதால் இந்த வருடம் கரும்பு விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளது.

விலை இருமடங்கு உயர்ந்தும் விளைச்சல் இல்லாதாதால் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த வருடம் பொங்கலுக்கு எதிர்பார்த்த அளவு கரும்பு கிடைக்குமா என்பது சந்தேகத்திற்கு உரியதாக உள்ளது. கரும்பின் விலை உயர்ந்தும் விவசாயிகள் கவலையில் உள்ளனர். இதை பற்றி நத்தம் கோமணாம்பட்டியை சேர்ந்த விவசாயி கணேசன் கூறியதாவது: நத்தம் பகுதியில் இருந்து பொங்கலுக்கு வருடாவருடம் தமிழகத்தின் பிறபகுதிகளுக்கு ஏராளமான கரும்பு லோடுகள் அனுப்புவது வழக்கம். ஆனால் இந்த வருடம் மழை பொய்த்து விட்டதால் கரும்பு விளைச்சல் கடுமையாக பாதிக்கபட்டுள்ளது. 300 கரும்புகள் அடங்கிய ஒரு வண்டி கரும்பு ரூ.3600 வரை விலை போகிறது. ஆனால் விளைச்சல் குறைவாக உள்ளதால் விவசாயிகளுக்கு எந்தப் பயனும் இல்லை என வேதனையுடன் தெரிவித்தார்.

### இத்தாலியில் நில நடுக்கம்

இத்தாலியின் நாபோலி நகரம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் ஞாயிற்றுக்கிழமை நில நடுக்கம் ஏற்பட்டது.

ரிக்டர் அளவுகோலில் 4.9 புள்ளிகள் பதிவான இந்த நில நடுக்கத்தால் உயிர்ச்சேதமோ, பொருள்சேதமோ ஏற்பட்டதாக உடனடி தகவல் இல்லை என நாபோலி மேயர் லூகி டி மாஜிஸ்டிரிஸ் தெரிவித்தார்.

எனினும், பீடிமோன்டே மாடெப்ஸ என்னும் நகரில் சில கட்டடங்களில் மட்டும் லேசான விரிசல் ஏற்பட்டதாக அவர் தெரிவித்தார். ஞாயிற்றுக்கிழமை மாலை 6.08 மணிக்கு ஏற்பட்ட இந்த நிலநடுக்கம் நாபோலி நகருக்கு வடகிழக்கில் 55 கி.மீ. தொலைவில் 10.5 கி.மீ. ஆழத்தை மையமாகக் கொண்டு

இருந்ததாக இத்தாலியின் புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

## விவசாயிகளுக்கு மாதம் ரூ.3 ஆயிரம் ஓய்வூதியம்

அறுபது வயது நிரம்பிய விவசாயிகளுக்கு மாதம் ரூ.3 ஆயிரம் ஓய்வூதியம் வழங்க வேண்டும் என தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

நாட்டறம்பள்ளியில் திங்கள்கிழமை நடைபெற்ற சங்கத்தின் ஒன்றிய ஆலோசனைக் கூட்டத்தில், மேற்கண்ட கோரிக்கை வலியுறுத்தப்பட்டது.

கெலவரப்பள்ளி அணையிருந்து வெலக்கல்நத்தம் செட்டேரி அணையை இணைக்கு திட்டத்தைச் செயல்படுத்த வேண்டும். விவசாயிகளுக்காகத் தனியாக நிதிநிலை அறிக்கையை வெளியிட வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. கூட்டத்துக்கு சங்கத்தின் ஒன்றியத் தலைவர் சம்பத்குமார் தலைமை வகித்தார். மாநில நிர்வாகக் குழு உறுப்பினர்கள் முல்லை, எஸ்.கண்ணு, ஒன்றியச் செயலர்கள் கே.ஆனந்தன், கே.கோவிந்தராஜி, மக்கள் பாதுகாப்பு இயக்கத் தலைவர் நீ.நடராஜன், நிர்வாகிகள் வெங்கடேசன், சென்றாயன்சுவாமி, கிருஷ்ணன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

## தென்பெண்ணை ஆற்றிலிருந்து தும்பலஅள்ளி அணைக்கு தண்ணீர்

தென்பெண்ணை ஆற்றிலிருந்து தும்பலஅள்ளி அணைக்கும் தண்ணீர் கொண்டு வரும் திட்டம் பரிசீலனையில் உள்ளது.

இதுகுறித்து தருமபுரி மாவட்ட பொதுப் பணித் துறை நீர்வள ஆதார அமைப்பின் செயற்பொறியாளர் வெ.ஜெகந்நாதன் திங்கள்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு: தருமபுரி மாவட்டம், பாலக்கோடு வட்டத்திற்குள்பட்ட தும்பலஅள்ளி அணைக்கு நீர் கொண்டு வருவதற்கு திட்டம் தயாரிக்க வேண்டும் என வலியுறுத்தி, சிலர் ஆர்ப்பாட்டம் நடத்திட உள்ளதாக அறிவித்துள்ளனர்.

இந்தத் திட்டம் ஏற்கெனவே தயாரிக்கப்பட்டு, பொதுப் பணித் துறை தலைமைப் பொறியாளர், திட்ட உருவாக்கம், நீர்வள ஆதார அமைப்பு ஆகியவற்றின் பரிசீலனையில் உள்ளது.

இந்தத் திட்டத்தில், தும்பலஅள்ளி அணைக்கும் நீர் கொண்டு வர, கிருஷ்ணகிரி மாவட்டம், எண்ணேகொல்புதூர் அணைக்கட்டின் வலதுபுறத்திலிருந்தில் இருந்து

புதிய கால்வாய் அமைத்து, தென்பெண்ணை ஆற்றிலிருந்து வெள்ளக் காலங்களில் வரும் உபரி நீர் தருமபுரி மாவட்டத்தில் உள்ள தும்பலஅள்ளி அணைக்கு கொண்டு வரப்படும்.

மேலும், தும்பலஅள்ளி அணையிலிருந்து கரடிஅள்ளி, ஏரி, மொரசஅள்ளி ஏரி, முக்குளம் ஏரி உள்பட 10 ஏரிகளும், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பாலகுறி ஏரி, வரட்டணஅள்ளி ஏரி, அம்மன் ஏரி உள்பட 11 ஏரிகள் என தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 21 ஏரிகளுக்கும் தண்ணீர் கொண்டுவரப்பட உள்ளது.

இதற்காக ரூ. 80 கோடி மதிப்பீட்டில் திட்ட மதிப்பீடு தயாரித்து ஏற்கெனவே அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. விரைவில் இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட உள்ளது. இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த 53 கிலோ மீட்டர் தொலைவிற்கு பிரதான கால்வாயும், 1.76 கிலோ மீட்டர் நீளத்திற்கு கிளைக் கால்வாயும் வெட்டப்படும்.

இதன் மூலம், 21 ஏரிகள் மட்டுமல்லாது, 16 தடுப்பணைகளின் நீர் வரத்து இருக்கும். இந்த தடுப்பணைகள் மூலம் 550 ஏக்கர் மற்றும் தும்பலஅள்ளி நீர்த் தேக்கத்தின் சாகுபடி ஆகாத பரப்பான சுமார் 660 ஏக்கர் நிலங்கள் பயன்பெறும். மேலும், இதன் ஈர்ப்பு மண்டலத்துக்குள் உள்ள கிணறுகள் மூலம் சுமார் 240 ஏக்கரும், கால்வாய் செல்லும் நேர்பாட்டின் மூலம் 160 ஏக்கரும் என மொத்தம் இந்தத் திட்டத்தின் மூலம் 1610 ஏக்கர் பயன்பெற உள்ளது. இரு மாவட்ட விவசாயிகளுக்கு பெரிதும் பயனளிக்கும் இந்தத் திட்டத்தில் 6608 மெட்ரிக் டன் உணவு உற்பத்தி கூடுதலாகக் கிடைக்கும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

### கொடிவகை காய்கறிகள் சாகுபடிக்கு இலவசப் பயிற்சி

கொடிவகை காய்கறிகள் சாகுபடி குறித்த இலவசப் பயிற்சி நாமக்கல்லில் ஜனவரி 9-ஆம் தேதி அளிக்கப்படவுள்ளது.

நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில் அன்று காலை 9 மணிக்கு நடைபெற உள்ள இந்த ஒரு நாள் பயிற்சி வகுப்பில், மண் பரிசோதனையின் அவசியம், கொடிவகை காய்கறிகளிலுள்ள புதிய ரகங்கள், பருவம், விதை அளவு, விதை

நேர்த்தி, பயிர் இடைவெளி, உர மேலாண்மை, நுண்ணூட்ட மேலாண்மை, சொட்டுநீர்ப் பாசன முறையில் நீர்வழி உரமிடல், வடிவமைப்பு முறைகள், களை நிர்வாகம், பூச்சி, நோய் நிர்வாக முறைகள் ஆகியவை குறித்து விரிவாகக் கற்றுத் தரப்பட உள்ளது.

இந்தப் பயிற்சியில் விவசாயிகள், பண்ணையாளர்கள், இளைஞர்கள் பங்கேற்கலாம். விருப்பமுள்ளவர்கள் நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில் 8-ஆம் தேதிக்குள் தங்கள் பெயரை பதிவு செய்து கொள்ள வேண்டும்.

மேலும் விவரங்களுக்கு 04286-266345, 266244, 266650 என்ற தொலைபேசி எண்களில் தொடர்பு கொள்ளலாம் என்று வேளாண் அறிவியல் நிலையத் திட்ட ஒருங்கிணைப்பாளர் பா.மோகன் வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### காராமணி விலை உயர்வால் விவசாயிகள் மகிழ்ச்சி

காராமணி உற்பத்தி குறைந்தபோதும், போச்சம்பள்ளி சந்தையில் விலை உயர்ந்ததால், விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

மத்தூர், போச்சம்பள்ளி சுற்றுப் பகுதியில் சுமார் 12 ஆயிரம் ஹெக்டர் நில பரப்பளவில் அவரை, துவரை, உளுந்து, பச்சைப் பயறு, காராமணி போன்ற பயிர் வகைகள் சாகுபடி செய்யப்படுகின்றன. ஆண்டு தோறும் டிசம்பர் முதல் பிப்ரவரி மாதம் வரை பயறு வகைகள் அறுவடை செய்யப்படுகிறது.

வழக்கம்போல, நிகழாண்டும் பயறு வகைகளை போச்சம்பள்ளி சுற்றுப் பகுதியில் விவசாயிகள் சாகுபடி செய்தனர். தற்போது அறுவடைப் பணிகள் தொடங்கியுள்ளன.

பயறு வகைகளை அறுவடை செய்யும் விவசாயிகள் போச்சம்பள்ளியில் கூடும் வாரச் சந்தையில் விற்பனை செய்து வருகின்றனர். இந்த சந்தைக்கு பெங்களூரு, திருவண்ணாமலை, வேலூர், கிருஷ்ணகிரி, தருமபுரி போன்ற பகுதியை சேர்ந்த மக்கள் மட்டும் இல்லாமல், பிற மாநிலங்களைச் சேர்ந்த மக்களும், வியாபாரிகளும் வருகின்றனர்.

கடந்தாண்டு விளைச்சல் அதிகமாக இருந்ததால், காராமணி ஒரு கிலோ ரூ.25 முதல் 30 வரை விற்பனை செய்யப்பட்டது. தற்போது விளைச்சல் குறைந்ததால், ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற சந்தையில், ஒரு கிலோ ரூ.35 முதல் 40 ரூபாய் வரை விற்பனையானது. இதனால், விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர்.

**கால்நடை சந்தைகளைத் திறக்கக் கோரிக்கை**

சேலம் மாவட்டம், ஓமலூர் பகுதியில் மூடிக் கிடக்கும் கால்நடை சந்தைகளைத் திறக்க வேண்டும் என்று ஓமலூர், அதன் சுற்றுப் பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள், கால்நடை வியாபாரிகள் வலியுறுத்தியுள்ளனர்.

ஓமலூர் பகுதியைச் சேர்ந்த ஏராளமான விவசாயிகள், கால்நடை வியாபாரிகள் மாவட்ட ஆட்சியரிடம் திங்கள்கிழமை அளித்த மனு விவரம்:

ஓமலூர் அதன் சுற்றுப் பகுதிகளில் ஆயிரக்கணக்கான குடும்பங்கள் விவசாயத்திலும், கால்நடை வளர்ப்பிலும் ஈடுபட்டு வருகின்றனர். இந்த நிலையில், கோமாரி நோய் தாக்குதல் காரணமாக கடந்த 2 மாதங்களாக கால்நடை சந்தைகள் மூடப்பட்டுள்ளன.

இதனால், விவசாயிகளும், வியாபாரிகளும் ஆடு, மாடு போன்ற கால்நடைகளை வாங்கவோ விற்கவோ முடியவில்லை.பொங்கல் பண்டிகையையொட்டி, விவசாயிகள் கால்நடைகளை வாங்குவதும், விற்பதும் அதிகமாக இருக்கும்.

எனவே கால்நடை சந்தைகளைத் திறக்க மாவட்ட ஆட்சியர் உடனடியாக உத்தரவிட வேண்டும் என்று அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

**நெல் குவிண்டாலுக்கு ரூ.3 ஆயிரம் கோரி விவசாயிகள் ஆர்ப்பாட்டம்**

நெல் குவிண்டாலுக்கு ரூ.3 ஆயிரம் வழங்கக் கோரி காட்டுமன்னார்கோயிலில் திரளான விவசாயிகள் ஊர்வலமாக சென்று வட்டாட்சியர் அலுவலகம் முன்பு திங்கள்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கொள்ளிடம் கீழனை பாசன விவசாயிகள் சங்கம் சார்பில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்துக்கு விவசாயிகள் சங்கத் தலைவர் பி.விநாயகமூர்த்தி தலைமை தலைமை தாங்கினார். பஸ் நிலையத்திலிருந்து ஊர்வலமாக புறப்பட்ட

விவசாயிகள் முக்கிய வீதிகள் வழியாக வட்டாட்சியர் அலுவலகத்தை அடைந்து அங்கு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.  விவசாயிகள் எம்.அன்பழகன், குருங்குடி எம்.பாரதி, பி.லட்சுமிகாந்தன், எஸ்.கவிசந்திரன், கலியமூர்த்தி ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஆர்.மணிவண்ணன், அப்துல்வதூது, எம்.ஆர்.பாலு, ஏ.வி.ஆர்.பழனிராஜா, ஆசைதம்பி உள்ளிட்ட ஆயிரத்துக்கும் மேற்பட்ட விவசாயிகள் இதில் பங்கேற்றனர்.

### கரும்பு விவசாயிகளுக்கு அரசு துரோகம்

புதுவை அரசு கரும்பு விவசாயிகளுக்கு மிகப்பெரிய துரோகம் இழைத்துள்ளதாக காங்கிரஸ் குற்றம் சாட்டியுள்ளது. இதுகுறித்து புதுவை மாநில காங்கிரஸ் செய்தி தொடர்பாளர் ஏ.வி.வீரராகவன் வெளியிட்ட அறிக்கை: 2013-2014ஆம் ஆண்டுக்கான கரும்பு விலை நிர்ணயம் ரூ.2,450ஆக புதுவை அரசு நிர்ணயித்துள்ளது. இது கரும்பு விவசாயிகளுக்கு இழைத்துள்ள மிகப்பெரிய துரோகம் ஆகும். கரும்பு பயிர்த் தொழில் என்பது விவசாயிகளுக்கும் சர்க்கரை ஆலை நிர்வாகத்துக்கும் இடையே ஒப்பந்த அடிப்படையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அரசு இயற்றியுள்ள ஒப்பந்த சட்ட விதிமுறைகளின்படி முன்கூட்டியே கரும்புக்கு விலை நிர்ணயம் செய்ய வேண்டும் என்பது சட்ட விதியாகும். ஆனால், இந்த அரசாங்கம் இயற்றிய சட்ட விதிகளுக்கு எதிராக செயல்படுவது முரண்பாடான செயலாகும்.

மத்திய வேளாண் துறை அமைச்சர் சரத்பவார், இந்தியா முழுவதும் உள்ள 573 சர்க்கரை ஆலைகளுக்கு ரூ.7,200 கோடி நிதி ஒதுக்கி வட்டியில்லாக் கடனாக வழங்க உத்தரவிட்டுள்ளார்.

இந்த உத்தரவு வெளியாகி ஒரு மாதம் ஆகிறது. ஆனால், புதுவை அரசின் சார்பில் இந்த நிதியைப் பெற எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று அதில் குறிப்பிட்டுள்ளார்.

### பால் கொள்முதல் விலை ரூ. 2 உயர்வு

ஜனவரி 1-ஆம் தேதி முதல் பால் கொள்முதல் விலையை ரூ. 2 உயர்த்துவதாக, பெங்களூரு பால் கூட்டுறவு கூட்டமைப்பு அறிவித்துள்ளது.

பெங்களூருவில் திங்கள்கிழமை கூட்டமைப்பின் தலைவர் சி.மஞ்சுநாத் செய்தியாளர்களிடம் கூறியது: பெங்களூரு பால் கூட்டுறவு கூட்டமைப்பின் இயக்குநர்கள் கூட்டம் டிச.28-ஆம் தேதி நடந்தது. இதில், பால் கொள்முதல் விலையை 2 ரூபாய் அளவுக்கு உயர்த்த முடிவு செய்யப்பட்டது.

இதன்படி, ஒரு லிட்டர் பாலை விவசாயிகளிடம் இருந்து ரூ.23 கொடுத்து கொள்முதல் செய்யப்படும். அதேபோல, பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்தின் ஊழியர்களுக்கு ஊக்கத்தொகையாக ஒரு லிட்டர் பாலுக்கு 15 பைசாவும், சங்க நிர்வாகத்துக்கு ஒரு லிட்டர் பாலுக்கு 2 பைசாவும் அளிக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்த மாற்றங்கள் புதன்கிழமை முதல் (ஜனவரி 1) அமலுக்கு வரும். பால் விற்பனை விலையை உயர்த்தி நுகர்வோரைச் சங்கடப்படுத்தாமல், பால் உற்பத்தியாளர்களின் நலன் கருதி பால் கொள்முதல் விலையை மட்டும் உயர்த்தியுள்ளோம். இதற்காக, ஜன.1 முதல் மார்ச் 31-ஆம் தேதி வரை கூட்டமைப்புக்கு ரூ.21.62 கோடி கூடுதலாக செலவாகும்.

கோமாரி நோயால் ஏராளமான கால்நடைகள் இறந்துள்ளன. இதனால், பால் உற்பத்தியின் உயிர்நாடியாக விளங்கும் பால் உற்பத்தியாளர்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே, பால் உற்பத்தியாளர்களின் துயரைத் துடைக்க இந்த நடவடிக்கையை எடுத்துள்ளோம். கோமாரி நோயால் பாதிக்கப்பட்டு இறந்த பசுவுக்கு தலா ரூ.10 ஆயிரம், கன்று ஈனாத இளம் பசுவுக்கு தலா ரூ.6 ஆயிரம், கன்றுக்கு தலா ரூ.3 ஆயிரம் இழப்பீடாக விவசாயிகளுக்கு அளிக்கப்படும். இதற்காக ரூ.78.43 லட்சம் கால்நடைப் பராமரிப்புத் துறைக்கு அனுப்பப்பட்டுள்ளது. எங்கள் கூட்டமைப்பு சார்பில், தினமும் 11.8 லட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்யப்படுகிறது. ராமநகரில் பால் பவுடர் தொழில்சாலை அமைக்கப்படும். ஈஜிபுராவில் ரூ.20 கோடி செலவில் ஃப்ளெக்சி பேக் மையம் நிறுவப்படும் என்றார் அவர்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## இயற்கை வேளாண் விஞ்ஞானி நம்மாழ்வார் மரணம்

பட்டுக்கோட்டை: இயற்கை வேளாண் விஞ்ஞானி நம்மாழ்வார் உடல்நலக்குறைவு காரணமாக காலமானார். அவருக்கு வயது 75. தஞ்சாவூர் மாவட்டம் திருக்காட்டுப்பள்ளியை அடுத்த இளங்காடு என்ற கிராமத்தில் கடந்த 1938ம் ஆண்டு பிறந்தவர் நம்மாழ்வார். அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் வேளாண்மை பட்டப்படிப்பை முடித்த அவர், 1963ம் ஆண்டு கோவில்பட்டியில் மண்டல வேளாண் ஆராய்ச்சி நிறுவனத்தில் பணிபுரிந்தார். அப்போது ரசாயன உரங்களால் மண்ணிற்கும், பயிர்களுக்கும் ஏற்படும் பாதிப்புகளை அறிந்த அவர், விவசாய முறையில் மாற்றங்கள் கொண்டு வரவேண்டும் என முடிவு செய்து தனது அரசு வேலையை உதறினார். தொடர்ந்து இயற்கை வேளாண் முறைகளை தமிழகத்தில் பிரபலப்படுத்துவற்கான முயற்சிகளில் ஈடுபட்டு வந்தார். இதன் விளைவாக தற்போது தமிழகத்தில் இயற்கை வேளாண்மை குறித்த விழிப்புணர்வு பெருகியுள்ளது. இதற்கு முக்கிய காரணம் நம்மாழ்வார் என்றால் அது மிகையல்ல. இயற்கை வேளாண் விழிப்புணர்வுக்காக பல்வேறு விருதுகளைப் பெற்றுள்ள நம்மாழ்வார், தமிழக இயற்கை உழவர் அமைப்பு மற்றும் தமிழ்நாடு சுற்றுச்சூழல் இயக்கம் என்ற இயக்கங்களையும் நடத்தி வந்தார். உடல்நலக்குறைவு காரணமாக அவதிப்பட்டு வந்த அவர், இன்று பட்டுக்கோட்டையை அடுத்த அத்திவெட்டியில் மரணமடைந்தார்.

## விவசாயபயிற்சி முகாமில் வெளிநாட்டு அதிகாரிகள் அசத்தல்

ஊட்டி: குன்னூரில், வேளாண்மை பயிற்சிக்காக வந்த, வெளிநாட்டு அதிகாரிகள், தங்களின் மண்ணின் பெருமைகளை பிரதிபலிக்கும் நிகழ்ச்சிகளை நடத்திக் காட்டி, பார்வையாளர்களை அசத்தினர். நீலகிரி மாவட்டம், குன்னூரில் உள்ள, கோத்தாரி வேளாண்மை மேலாண்மை மையத்தில், விவசாயம் தொடர்பான பயிற்சி முகாம் நடந்தது. இதில், ஆப்கானிஸ்தான், வங்கதேசம், இந்தோனேஷியா, மியான்மர் நாடுகளை சேர்ந்த, அரசு அதிகாரிகள் பங்கேற்றனர். இதையொட்டி, "நீலகிரி கலாசார சங்கம்' சார்பில், "உலகத்தில் ஒரு பார்வை' என்ற தலைப்பில், நிகழ்ச்சி நடந்தது. தங்கள் நாட்டின் பாரம்பரிய உடையணிந்து, தேசிய கீதம் பாடி மெய்சிலிர்க்க வைத்த வெளிநாட்டு அதிகாரிகள், தாய்நாட்டின் சிறப்பு, கலாசாரம், விழாக்கள் குறித்து விளக்கினர். தவிர, தங்கள் நாடுகளின் உணவுகளை சமைத்து, பார்வையாளர்களுக்கு வழங்கினர். நியூசிலாந்து அருகேயுள்ள, பிஜி தீவை சேர்ந்த, பெண் அதிகாரி ஒருவர் கூறுகையில், "எங்கள் நாட்டில் பெண்களுக்கு, முழு சுதந்திரம் கிடைக்கவில்லை; இருப்பினும், இளைய தலைமுறையினர் மத்தியில், பெண்களை முன்னிறுத்தும் மனப்போக்கு தென்பட துவங்கியுள்ளது' என்றார். வங்கதேச அதிகாரிகள் கூறுகையில், "இந்தியாவை போன்று, வங்க தேசத்திலும், ரவீந்திரநாத் தாகூர் எழுதிய தேசிய கீதம் தான், பாடப்படுகிறது. வங்கதேசம் உருவாக காரணமாக இருந்த, இந்தியாவுக்கு நன்றி செலுத்த கடமைப்பட்டுள்ளோம்' என, நெகிழ்ந்தனர்.

## தமிழகத்தில் முட்டை விலை 360 காசாக நிர்ணயம்

நாமக்கல்: தமிழகம், கேரளாவில் முட்டை விலை, 360 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. நாமக்கல், தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், 365 காசுகளுக்கு விற்பனை செய்யப்பட்ட முட்டை விலையை, ஐந்து காசுகள் குறைந்து, 360 காசாக நிர்ணயம் செய்வது என, முடிவு செய்யப்பட்டது. நாமக்கல், பண்ணையாளர், வியாபாரிகள் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், முட்டைக் கோழி விலை, 57 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பல்லடத்தில், நடந்த கறிக்கோழி உற்பத்தியாளர் ஒருங்கிணைப்பு கூட்டத்தில், அதன் விலை, 80 ரூபாயாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

**ஒரு போக சாகுபடிக்காக வைகை அணையில் தண்ணீர் திறக்க வழக்கு**

மதுரை:மதுரை மாவட்டத்தில் கருகும் ஒரு போக சாகுபடி பயிர்களை காப்பாற்ற, வைகை அணையிலிருந்து தண்ணீர் திறக்க கோரிய வழக்கில், அரசிடம் விளக்கம் பெற்று தெரிவிக்க, ஐகோர்ட் கிளை உத்தரவிட்டது.

மேலுார் திருமேனி, அமலன் தாக்கல் செய்த பொதுநல மனுக்கள்:

நாங்கள் முல்லைப் பெரியாறு அணையின், பழமையான ஆயக்கட்டு பாசன விவசாயிகள். பெரியாறு அணை நீரை நம்பி, மதுரை மாவட்டத்தில் ஒரு லட்சம் ஏக்கரில், ஒரு போக சாகுபடி நடக்கிறது.கம்பம் பள்ளத்தாக்கு மற்றும் பெரியாறு பிரதான கால்வாய் இரு போக சாகுபடிக்கு, ஜூனில் தண்ணீர் திறக்கப்பட்டது. பெரியாறு பிரதான கால்வாய் ஒரு போக சாகுபடிக்கு செப்.,25 ல் தண்ணீர் திறக்கப்பட்டது. வைகையில் தண்ணீர் இருப்பு குறைந்துள்ளதாகக்கூறி, அக்.,6 ல் தண்ணீரை நிறுத்தினர். ஒருபோக சாகுபடிக்கு 80 நாட்கள் தண்ணீர் தேவை. ஆனால், 12 நாட்கள் மட்டும் தண்ணீர் திறந்தனர். ஒருபோக சாகுபடி விவசாயிகள் போராட்டம் நடத்தினர். இதனால் நவ.,2 ல் தண்ணீர் திறந்தனர். ஒரு போகத்திற்கு, மொத்தம் 49 நாட்கள் முறைப்பாசனம் மூலம் தண்ணீர் வழங்கினர். இதனால், பயிர்கள் கருகும் நிலையில் உள்ளன. அதிகம் செலவு செய்துள்ளோம்.

மேலுார் வரை ஒருபோக சாகுபடிக்கு, தண்ணீர் திறக்கக்கோரி, போராட்டம் நடந்தது. டிச.,23 முதல் 3 நாட்கள் தண்ணீர் திறந்தனர்.கம்பம் பள்ளத்தாக்கு விரிவாக்க பகுதிக்கு இடைவெளியின்றி, 120 நாட்கள் தண்ணீர் னியோகின்றனர். எங்களை புறக்கணிக்கின்றனர். ஒருபோக சாகுபடிக்கு, வைகையிலிருந்து 5 நாட்கள் தண்ணீர் திறக்க வலியுறுத்தி, கலெக்டர், பொதுப்பணித்துறை தலைமைப் பொறியாளரிடம் மனு அளித்தோம். நடவடிக்கை எடுக்க உத்தரவிட வேண்டும், என குறிப்பிட்டனர். நீதிபதிகள் பி.என்.பிரகாஷ், ஆர்.மகாதேவன் பெஞ்ச் முன், மனுக்கள் விசாரணைக்கு வந்தன. மனுதாரர் தரப்பில் வக்கீல்கள் பீட்டர் ரமேஷ்குமார், ஜெயகார்த்திக் ஆஜராயினர். கூடுதல் அட்வகேட் ஜெனரல் செல்லப்பாண்டியன்,“ விவசாயிகளின் பிரச்னையில் அரசுக்கு அக்கறை உள்ளது. குடிநீர் தேவைக்காக அணையில் தண்ணீர் உள்ளது. துப்பணித்துறையினரிடம் கருத்து கோர, அவகாசம் தேவை,” என்றார்.

### கடும் பனிப்பொழிவால் விவசாயிகள் கவலை மழைக்கு வாய்ப்பு குறைந்ததால் ஏமாற்றம்

தியாகதுருகம்:பனிப்பொழிவு அதிகரித்துள்ளதால் மழை பெய்யும் வாய்ப்பு குறைந்துவிட்டதாக விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

பருவமழை கடந்த இரு ஆண்டுகளாக எதிர்பார்த்த அளவு பெய்யாமல் ஏமாற்றியுள்ளது. கிராமப்புறங்களில் உள்ள நீர்நிலைகள் நிரம்பாததால் நிலத்தடி நீர்மட்டம் குறைந்து கோடையில் தண்ணீர் தட்டுப்பாடு ஏற்படும் நிலை உருவானது.

விழுப்புரம் மாவட்டம், கள்ளக்குறிச்சி பகுதியில் உள்ள கோமுகி, மணிமுக்தா அணைகள் இவ்வாண்டு நிரம்பவில்லை. இது ஆயக்கட்டு விவசாயிகளுக்கு மேலும் கவலையை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த ஆண்டு கோமுகி அணை மட்டும் நிரம்பியதால் தடுப்பணைகளுக்கும் போதிய தண்ணீர் கிடைத்து ஆற்றுப்படுகையில் நீர்வளம் பாதுகாக்கப்பட்டது. இவ்வாண்டு இதற்கும் வழியின்றி ஏமாற்றத்தை கொடுத்துள்ளது.

கடந்த கோடை மாதம் கால்நடைகளுக்கு கூட தண்ணீர் கிடைக்காமல் ஏரி, குளங்கள் பாலைவனம் போல் வறண்டு கடும் பாதிப்பை ஏற்படுத்தியது. இந்நிலையில் இவ்வாண்டு பருவமழை மீண்டும் ஏமாற்றியதால் விவசாயிகளுக்கு கலக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

"மடி' புயல் காரணமாக தியாகதுருகம், சின்னசேலம் பகுதிக்கு ஓரளவு மழை கிடைத்த போதிலும், கல்வராயன் மலையில் எதிர்பார்த்த மழை பெய்யவில்லை. இதனால் அணைகளின் நீர்மட்டம் ஒரு அடி கூட உயரவில்லை.

இவ்வாண்டு பருவமழை தாமதம் காரணமாக சம்பா சாகுபடி தாமதமாகவே துவங்கியது. பலர் நெல் சாகுபடியை செய்யாமல் தவிர்த்து விட்டனர். மழையளவு குறைந்ததால் சிலர் நடவுக்காக வளர்த்த நாற்றுகளை மாடுகளுக்கு உணவாக் கினர். கோமுகி அணை பாசனத்திற்காக திறந்துவிட்ட போதிலும், குறிப்பிட்ட காலம் வரை தண்ணீர் வெளியேற்றப்படுமா என்பது கேள்விக்குறியாக உள்ளது. மணிமுக்தா அணையில் போதிய தண்ணீர் இல்லாததால் பாசனத்திற்கே திறந்து விடமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இது ஆயக்கட்டு விவசாயத்திற்கு கடும்

பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. தடுப்பணைகளிலும் தண்ணீர் இன்றி நிலத்தடி நீர்மட்டம் குறைந்து வருவதால் கிணற்றுநீர் பாசன விவசாயிகளுக்கு அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. கடந்த 2011 ம் ஆண்டு டிச., மாத இறுதியில் "தானே' புயல் விழுப்புரம் மாவட்டத்திற்கு கனமழையை கொடுத்தது. அதேபோல் இவ்வாண்டு இறுதியில் புயல் சின்னம் தோன்றி மழையை கொடுக்கும் என்று எதிர்பார்த்த மக்களுக்கு ஏமாற்றமே மிஞ்சியது.

கடந்த 10 நாட்களாக இரவில் கடும் பனிப்பொழிவு அதிகரித்துள்ளது. மாலை 5 மணிக்கே பனிப்பொழிவு துவங்கி காலை 9 மணிவரை அதன் தாக்கம் உள்ளது. இரவு நேரத்தில் புகைமூட்டம் போல் காணப்படுகிறது.

பனிப்பொழிவு அதிகரித்தால் மழை வாய்ப்பு குறைவு என்று விவசாயிகள் தெரிவிக்கின்றனர். இனி மழை பெய்ய வாய்ப்பில்லை என்பதால் கவலையடைந்துள்ளனர்.

**மக்காசோளம் வரத்து அதிகரிப்பு**

சின்னசேலம்:சின்னசேலம் மார்க்கெட் கமிட்டிக்கு மக்கா சோளம், மணிலா வருகை அதிகரித்தது.

சின்னசேலம் மார்க்கெட் கமிட்டிக்கு நேற்று 2000 ஆயிரம் மூட்டைகள் வந்தது. மக்காசோளம் அதிகபட்சமாக மூட்டை 1146 ரூபாய், குறைந்தபட்சமாக 889 ரூபாய் என விலை நிர்ணயம் செய்யப்பட்டது. சின்னசேலம் மார்க்கெட்டில், கடந்த வாரம் 96 லட்சம் ரூபாய் மதிப்பிலான 8,700 மூட்டைகள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

**பனிப் பயிறுக்கு களை எடுக்கும் பணி துவக்கம்**

விக்கிரவாண்டி:மயிலம், விக்கிரவாண்டி ஒன்றிய பகுதியில் பனிப்பயிறுக்கு களை எடுக்கும் பணி நடந்தது.

மயிலம் மற்றும் விக்கிரவாண்டி பகுதிகளில் போதுமான மழையின்றி விவசாயிகள் அவதிப் பட்டு வருகின்றனர். நேரத்திற்கேற்ற விவசாயமாக பனிப் பயிர் என்றழைக்கப்படும் காராமணி பயிரை, ஆயிரத்திற்குமேற்பட்ட ஏக்கர் பரப்பளவில் விவசாயிகள் சாகுபடி செய்துள்ளனர். மானாவாரியாக பயிர் செய்துள்ள பனிப்பயிருக்கு மற்ற பயிர் சாகுபடிகளை விட இதற்கு செலவு குறைவு. இந்த

பயிறுக்கு குறைந்த அளவு ஈரப்பதத்தில் பயிர் ஊட்டமாக வளருவதால் 70 நாட்களில் அறுவடை செய்ய முடிகிறது. இப்பயிருக்கு நடுவில் இரண்டு முறை "களை' எடுத்தால் மகசூல் அதிகரிக்கும். தற்போது பயிர்களில் புற்கள் முளைத்து களை அதிகமாகியுள்ளதால், 25 வது நாளில் முதல் களை எடுக்கும் பணி துவங்கியது. மயிலம், விக்கிரவாண்டி பகுதியிலுள்ள விவசாயிகள் "களை' எடுப்பு பணியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

**பருவ மழை பெய்யாததால் வறண்டுபோன அரியலூர் ஏரி**

ரிஷிவந்தியம்:பருவமழை போதிய அளவு பெய்யாததால் அரியலூர் ஏரி தண்ணீர் இன்றி பாலைவனம் போல் வறண்டு போனது.

பகண்டை கூட்ரோடு அடுத்த அரியலூர் கிராமத்தில் பெரிய அளவிலான ஏரி உள்ளது. இந்த ஏரி மூலம் சுற்றியுள்ள ஏராளமான கிராமங்களை சேர்ந்த விவசாய நிலங்கள் பாசன வசதி பெற்றன. இதன் மூலம் கால்நடைகளும் பயனடைந்தன. சமீபத்தில் ஏற்பட்ட புயலின் மூலம் பெய்த மழையால் சிறிதளவு தண்ணீர் இருந்தது. தொடர்ந்து பருவமழை போதிய அளவு பெய்யாததால், தற்போது ஏரியில் சிறிதளவு கூட தண்ணீர் இன்றி வறண்டு கிடக்கிறது.

ஏரியில் வளர்ந்துள்ள புற்கள் கூட காய்ந்து, பாலைவனம் போல் அப்பகுதி மாறிவிட்டது. இதனால் அப்பகுதி விவசாயிகளும், கால்நடை மேய்ப்பவர்களும் மிகுந்த பாதிப்புக்கு ஆளாகி உள்ளனர்.

**ஒட்டு ரக வெள்ளரி சாகுபடியில் விவசாயிகள் ஆர்வம்**

அவலூர்பேட்டை:மேல்மலையனூர் ஒன்றியம் மேல் அருங்குணம் கிராமத்தில் உள்ள பல விவசாயிகள் வீரிய ஒட்டு ரக வெள்ளரி பயிர் சாகுபடி செய்துள்ளனர். இது குறித்து விவசாயிகள் கூறியதாவது: ஆண்டுக்கு மூன்று பருவங்களான ஆடி, கார்த்திகை, சித்திரை, மாதங்களில் ஒட்டு ரக வெள்ளரி விதைகளை இட வேண்டும். 45 வது நாளில் பிஞ்சு விட துவங்கும். 35 நாட்கள் வரை வெள்ளரிக் காய்களை தினசரி பறிக்கலாம். இது 75 நாள் முதல் 80 நாள் வரையிலான பயிராகும். குறைந்தளவு தண்ணீரே போதும். களை எடுத்தலும், உரம் மற்றும் மருந்து தெளித்தலும் அவசியம்.

கிலோ ஒன்றுக்கு பெரிய அளவு 2 ரூபாய்க்கும், நடுத்தரம் 10 ரூபாய்க்கும், பிஞ்சு 20

ரூபாய் வரையிலும் விலை நிர்ணயிக்கின்றனர். நிலமும், உழைப்பும் மட்டுமே விவசாயிகளுடையது. மற்ற அனைத்து செலவினங்களையும் திருவண்ணாமலை மாவட்டம் மங்கலத்தில் உள்ள தனியார் கம்பெனி செய்கிறது.
இந்த வெள்ளரிக்காய் பதப்படுத்தி ஊறுகாய் செய்வதற்காக தினசரி நிலத்தில் நேரடியாக அறுவடை செய்து எடுத்து செல்கின்றனர். எந்தவித செலவும் இல்லாமல் அதிக பலன் கிடைப்பதால். இப்பகுதியில் உள்ள பல விவசாயிகள் ஆர்வத்துடன் சாகுபடி செய்து வருகின்றனர்.

**தமிழகம், கேரளாவில் முட்டை விலை 360 காசாக நிர்ணயம்**

நாமக்கல்: தமிழகம், கேரளாவில் முட்டை விலை, 360 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. நாமக்கல்லில், தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு கூட்டம், நேற்று, நடந்தது. முட்டை உற்பத்தி, மார்க்கெட் நிலவரம் குறித்து பண்ணையாளர்கள் விவாதித்தனர். அதையடுத்து, 365 காசுகளுக்கு விற்பனை செய்யப்பட்ட முட்டை, ஐந்து காசு குறைந்து, 360 காசாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.
நாட்டின் பிற மண்டலங்களில் முட்டை விலை (காசுகளில்) நிலவரம்:
சென்னை, 390, பெங்களூரு, 390, மைசூர், 380, ஹைதராபாத், 381, மும்பை, 396, விஜயவாடா, 385, கொல்கத்தா, 413, பர்வாலா, 386, டில்லி, 408.
இவ்வாறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.
நாமக்கல்லில், நேற்று, நடந்த பண்ணையாளர், வியாபாரிகள் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், முட்டைக் கோழி விலை, 57 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பல்லடத்தில், நடந்த கறிக்கோழி உற்பத்தியாளர் ஒருங்கிங்கிணைப்பு கூட்டத்தில், அதன் விலை, 80 ரூபாயாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

**சாமந்தி விளைச்சல் ஜோர் விலை உயர்வால் மகிழ்ச்சி**

தர்மபுரி: தர்மபுரியில், சாமந்தி பூ விலை அதிகரித்து உள்ளதால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். தர்மபுரி, தொப்பூர், பென்னாகரம், பாலக்கோடு, மாரண்டஹள்ளி உள்பட மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில், இரண்டாயிரம் ஹெக்டேர் சாமந்தி பூ சாகுபடி செய்யப்பட்டுள்ளது. மார்கழி மாத துவக்கத்தில் இருந்தே, சாமந்திப்பூவின் விலை உயர்ந்துள்ளதால், விவசாயிகள் மகிழ்ச்சியில்

உள்ளனர். தொப்பூரை சேர்ந்த விவசாயி கணபதி கூறியதாவது:
தர்மபுரி மாவட்டத்தில் மலர் சாகுபடியில், சாமந்தி முக்கிய பங்கு வகிக்கிறது. நமது மாவட்டத்தில், கோ-1, கோ-2 மற்றும் மதுரை-1 ஆகிய ரகங்களையும், தோட்ட கலைத்துறை அதிகாரிகள் பரிந்துரை செய்துள்ள ரகங்களையும், கஸ்தூரி, சாந்தினி போன்ற வீரிய ரகங்களையும் விவசாயிகள் சாகுபடி செய்துள்ளனர்.
மாலைகள் கட்டவும், பூஜை மற்றும் அலங்காரத்துக்கும் சாமந்தி பூ முக்கிய பங்கு வகிப்பதால், ஆண்டு முழுவதும் சாமந்திப்பூவின் விற்பனை இருக்கும். மேலும், சாமந்தி பூ சாகுபடிக்கு, ஒரு ஹெக்டேருக்கு, தேசிய தோட்டக்கலை இயக்கம் சார்பாக, 12 ஆயிரம் ரூபாய் வழங்கப்படுகிறது. தர்மபுரி மாவட்ட விவசாயிகள் சாமந்தி பூ சாகுபடியில், அதிக ஆர்வம் காட்டி வருவதால், சாகுபடி பரபரப்பளவு தொடர்ந்து அதிகரித்து வருகிறது.
இதில், வீரிய ரகத்தில் கூடுதல் மகசூல் கிடைக்கிறது. தற்போது மாவட்டத்தில் நிலவும் குளுமையான சீதோஷ்ண நிலை காரணமாக, சாமந்தி பூ விளைச்சல் அதிகரித்து உள்ளது. ஒரு கிலோ சாமந்திப்பூ, 35 ரூபாய் முதல், 40 ரூபாய் வரை வியாபாரிகள் கொள்முதல் செய்கின்றனர். தொடர்ந்து விழாக்காலங்கள் மற்றும் திருமண முகூர்த்தங்கள் வர உள்ளதால், சாமந்தியின் விலை மேலும் உயரும் என எதிர்பார்க்கிறோம், என்றனர்.

**மா மரங்களில் சாம்பல் நோய் :மருந்து தெளிக்க வேண்டுகோள்**

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி மாவட்டத்தில், மாவில் சாம்பல் நோய் தாக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளதால், விவசாயிகள், குத்தகைதாரர்கள் விரக்தியில் உள்ளனர்.
கிருஷ்ணகிரி மாவட்டத்தில் சுமார், 50 ஆயிரம் ஹெக்டேருக்கு மேல், மா சாகுபடி செய்யப்பட்டு உள்ளது. குறிப்பாக, அல்போன்சா, தோதாபுரி, பங்கனப்பள்ளி, நீலம், செந்தூரா, மல்கோவா, பீத்தர் ஆகிய ரகங்கள் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. இதில், தோத்தாபுரி ரகம், 60 சதவீதத்திலும், செந்தூரா மற்றும் நீலம் ரகங்கள், 30 சதவீதத்திலும், அல்போன்சா, ஐந்து சதவீதத்திலும் சாகுபடி செய்யப்படுகிறது. மற்ற ரகங்களான பீத்தர், மல்கோவா, ருமானி, பங்கனப்பள்ளி, காலப்பாடு, போன்றவை, ஐந்து சதவீதத்திலும் சாகுபடி செய்யப்படுகிறது.
கடந்த ஆண்டும் டிசம்பர் இறுதியில் மா மரங்களில் பூக்கள் பூத்தது. இந்நிலையில்,

இந்த ஆண்டு மாவட்டத்தில், முன்பருவ ரகங்களான செந்தூரா, பீத்தர், பையூர்-1, நீலம் ஆகியவற்றில் பூக்கள் பூக்க ஆரம்பித்து உள்ளது. இதேவேளையில், மத்திய பருவ ரகங்களான பெங்களூரா, பங்கனப்பள்ளி, அல்போன்சா, சேலம் பெங்களூரா, ஜஹாங்கீர், இமாம்பசந்த், குதாதாத் போன்ற ரகங்களில் பூக்கள் பூக்க ஆரம்பித்து உள்ளது. கிருஷ்ணகிரி மாவட்டத்தில், இந்த ஆண்டு அதிக பனிப்பொழிவு இருந்தும் கிருஷ்ணகிரி, சந்தூர், ஜெகதேவி, பர்கூர், தொகரப்பள்ளி, வேலம்பட்டி, நாகரசம்பட்டி, கரடியூர், பாலிநாயனப்பள்ளி, மத்தூர், ஊத்தங்கரை, ஆலப்பட்டி, ராயக்கோட்டை, வேப்பனப்பள்ளி ஆகிய பகுதிகளில் மத்திய பருவ ரகங்களில் அதிக அளவு பூக்கள் பூக்க ஆரம்பித்துள்ளது.

பூக்கள் பூக்க ஆரம்பித்தவுடன், மா மரங்களுக்கு மருந்து தெளிக்காவிடில், மா பூவில் தத்துபூச்சிகள் தாக்கி சாம்பல் நோய் ஏற்படுவதால், விளைச்சல் குறையும்.

கடந்த மூன்று ஆண்டுகளாக மாவுக்கு உரிய விலை கிடைக்கவில்லை. ஒரு டன் மாங்காய் அதிகபட்சமாக, ஐந்தாயிரம் ரூபாய் வரை மட்டுமே விற்பனையானது. மூன்று ஆண்டாக அதிக செலவு செய்து மருந்துகளை தெளித்த விவசாயிகள் மற்றும் குத்தகை தாரர்களுக்கு நஷ்டமே ஏற்பட்டது.

எனவே, இந்த ஆண்டு மாவில் பூக்கள் பூக்க ஆரம்பித்தும், பல விவசாயிகள் மற்றும் குத்தகை வியாபாரிகள் மா பூக்களுக்கு மருந்தினை தெளிப்பதை தவிர்த்து வருகின்றனர். எவ்வளவு செலவு செய்தாலும் நஷ்டமே மிஞ்சும் என்பதால், பலர் பூக்களுக்கு மருந்து தெளிக்காமல் உள்ளனர்.

மா பூக்களில் சாம்பல் நோய் ஏற்படும் அபாயம் உள்ளதால், மா விவசாயிகள் மற்றும் குத்தகை வியாபாரிகள் உடனடியாக மா பூக்களுக்கு மருந்து தெளிக்க வேண்டுமென, தோட்டக்கலை துறை மற்றும் வேளாண் துறையினர் கேட்டுக்கொண்டுள்ளனர்.

**விவசாயத்துக்கு 2.29 கோடி ரூபாய் ஒதுக்கீடு**

கிருஷ்ணகிரி: "கிருஷ்ணகிரி மாவட்டத்தில் வெளியிடப்பட்டுள்ள, 2014-15ம் ஆண்டுக்கான நபார்டு வங்கி கடன் திட்ட அறிக்கையில், 2 ஆயிரத்து, 29 கோடி ரூபாய் விவசாயத்துக்கு, ஒதுக்கப்பட்டு உள்ளதாக,' கலெக்டர் ராஜேஸ் தெரிவித்துள்ளார்.

தேசிய வேளாண்மை வங்கி மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியான நபார்டு வங்கியின், 2014-15ம் ஆண்டுக்கான, கிருஷ்ணகிரி மாவட்ட கடன் திட்ட அறிக்கை வெளியிடும் நிகழ்ச்சி, கலெக்டர் அலுவலகத்தில் நடந்தது.
கலெக்டர் ராஜேஸ் தலைமை வகித்து, மூன்று ஆயிரத்து, 92 கோடி மதிப்பிலான கடன் திட்ட அறிக்கையை வெளியிட, முன்னோடி வங்கி மேலாளர் ருத்திரப்பா பெற்றுக்கொண்டார். தொடர்ந்து, கலெக்டர் ராஜேஸ் பேசியதாவது:
கிருஷ்ணகிரி மாவட்டத்தில் இயங்கும் வங்கிகள் தயாரிக்கும் கடன் திட்டத்துக்கு அடிப்படையாக, இந்த கடன் அறிக்கை அமையும். 12வது ஐந்தாண்டு திட்டத்தின் (2012-17) அடிப்படையில் தயாரிக்கப்பட்ட இத்திட்டம், உள்கட்டமைப்பு தேவைகள், மூலபொருள்களின் விலையேற்றம், அரசாங்கத்தின் கொள்கைகள் ஆகிய காரணிகளை கருத்தில் கொண்டு, விவசாயம் மற்றும் இதர தொழில்களுக்கு, அதிக கவனம் செலுத்தி உருவாக்கப்பட்டு உள்ளது.
விவசாயிகள் மற்றும் தொழில் முனைவோர் கடன் தேவையை வங்கியாளர்கள் கருத்தில் கொண்டு, மாவட்டத்தின் வளர்ச்சிக்காக கடன் அளிக்க முன் வர வேண்டும். இத்திட்டத்தில், இரண்டு ஆயிரத்து, 29 கோடி ரூபாய் விவசாயத்துக்கு ஒதுக்கப்பட்டு உள்ளது. மேலும், 443 கோடி ரூபாய் சிறு மற்றும் குறு தொழில்களுக்கும், 619 கோடி ரூபாய் இதர தொழில்களுக்கும் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்திய அரசாங்கம் மற்றும் நபார்டு வங்கியின் முயற்சியால், குளிரூட்டப்பட்ட கிடங்குகள், தானிய கிடங்குகள் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. விவசாயிகள் தங்களது விளை பொருட்களை அனுமதிக்கப்பட்ட கிடங்குகளில் வைத்து அதிக விலை கிடைக்கும் நேரத்தில், அவற்றை விற்பனை செய்யலாம். மேலும், விவசாயிகள் கிடங்குகளில் பெறப்பட்ட ரசீதை கொண்டு, ஏழு சதவீத வட்டியில் வங்கி கடன் பெறலாம். இத்திட்டமானது, கடந்த ஆண்டை காட்டிலும், 15 சதவீதம் உயர்த்த திட்டமிடப்பட்டு உள்ளது, என்றார். நிகழ்ச்சியில், நபார்டு வங்கியின் உதவி பொது மேலாளர் மணிவேல் மற்றும் இதர வங்கி மேலாளர்கள், மாவட்ட துறை அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**கோழிப்பண்ணை பயனாளிகள் அலைக்கழிப்பு: மறியல் முயற்சி**

தேனி:தேனியில் கோழிப்பண்ணை பயனாளிகள் அலைக்கழிக்கப்பட்டதால், அவர்கள் அதிருப்தி அடைந்து ரோடு மறியல் செய்ய முயன்றனர். அதிகாரிகள் சமரசம் செய்து அழைத்துச் சென்று மீட்டிங் நடத்தினர்.

தேனி கால்நடை பராமரிப்புத்துறை சார்பில், நாட்டுக்கோழி வளர்க்கும் பயனாளிகள் 150 பேருக்கு அரசு வழங்கும் சலுகைகள், மானியங்கள் தொடர்பான தகவல்களை விளக்கி கூறுவதற்கும், அது தொடர்பான சலுகைகள் வழங்குவதற்கு தேனி கலெக்டர் அலுவலகத்தில் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

பெரியகுளம், போடி சட்டசபை தொகுதிகளுக்கு உட்பட்ட 150 கோழிப்பண்ணை பயனாளிகள் வந்திருந்தனர்.

நேற்று காலை 10 மணிக்கு வந்த பயனாளிகளை பகல் 2 மணி வரை அதிகாரிகள் கண்டுகொள்ளவில்லை. 2 மணிக்கு மேல் தேனி அல்லிநகரத்தில் உள்ள கால்நடை இணை இயக்குனர் அலுவலகத்திற்கு செல்லுங்கள். அங்கு தான் கூட்டம் நடக்க உள்ளது, என கூறி விட்டனர். இங்கு பயனாளிகள் சென்ற போது, அதிகாரிகள் யாரும் இல்லை. ஒரு மணி நேரம் தாமதமாக வந்த அதிகாரிகள் நாங்கள் கூட்டத்திற்கு யாரையும் வரச்சொல்லவில்லையே. இங்கு நடத்த எந்த ஏற்பாடும் செய்யவில்லையே எனக்கூறியதோடு, யார் உங்களை இங்கு அனுப்பி வைத்தது, எனக்கூறி அதிகாரிகளுக்குள் வாக்குவாதம் செய்து கொண்டனர்.

இதனால் அதிருப்தி அடைந்த பயனாளிகள் பெரியகுளம் ரோட்டில் மறியல் செய்ய முயன்றனர். அதன் பிறகு பயனாளிகளை சமரசம் செய்த அதிகாரிகள், சிறிது நேரம் பொறுங்கள், சேர் வாடகைக்கு எடுத்து வந்து, கூட்டத்திற்கு தயார் செய்து விடுகிறோம். இங்கேயே நடத்தி விடலாம், எனக்கூறி சமரசம் செய்தனர்.

**மருந்து தெளிக்க வேண்டும் என்றார். முன்பேர வர்த்தக திறனூட்ட பயிற்சி**

பெரியகுளம்: தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் சார்பில், விவசாயிகள் மற்றும் வியபாரிகளிடையே நல்லுறவை ஏற்படுத்த, விதைப்பதற்கு முன்பே விலை நிர்ணயம் செய்யும், முன்பேர வர்த்தக திறனூட்டும் பயிற்சி நடத்தப்பட்டு வருகிறது. பெரியகுளம் தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில், தேசிய முன்பேர சந்தை ஆணையம் உதவியுடன் நடந்த பயிற்சிக்கு கல்லூரி முதல்வர்

(பொறுப்பு) ரத்தினசாமி தலைமை வகித்தார். தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர்கள் பரமசிவம், ஏங்கல்ஸ், பிரகதீஸ்வரன் உட்பட பேராசிரியர்கள் முன்னிலை வகித்தனர். என்.சி.டி.இ.எக்ஸ்., நிறுவன துணைத் தலைவர் கணேசன், அலுவலர் செரிமுல்லா ஆகியோர், முன்பேர வர்த்தகத்தின் முக்கியத்துவம் குறித்து பேசினர். முன்பேர சந்தை என்பது, இணையதளம் மூலம் விளைபொருட்களை சந்தையில் விற்பதாகும். இதனை விவசாயிகளிடம் தெரிவிப்பதற்காக, மத்திய அரசு "என்.சி.டி. இ.எக்ஸ்', "எம்.சி.எக்ஸ்' உட்பட ஆறு நிறுவனங்களுக்கு முன்பேர சந்தை ஆணையம் அனுமதியளித்துள்ளது. சந்தையின் மூலம் விவசாயிகள் தங்கள் உற்பத்தி செய்யும் விளைப்பொருட்களை, எதிர்கால சந்தையில் விற்கலாம். அறுவடைக்கு பிந்தைய விலை விபரத்தை விதைப்பிற்கு முன்பே அறிந்து பயிரிடலாம்.

எல்லா தரப்பு சந்தை பங்கேற்பாளர்களுக்கும் நன்மை கொடுப்பதால், மத்திய அரசாங்கமே முன்பேர சந்தை ஆணையம் மூலம் கண்காணித்து,முறைப்படுத்தி வருகிறது. தமிழகத்தில் இச்சந்தையை பிரபலபடுத்தும் வகையில், விவசாயிகளுக்கும், ஆராய்ச்சியாளர்களுக்கும், வேளாண் அதிகாரிகள் மற்றும் வேளாண் மாணவர்களுக்கும் முன்பேர சந்தை பயிற்சியை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் மூலமாக ஏற்பாடு செய்துள்ளது. இதில் தோட்டக்கலைக்கல்லூரி மற்றும் மேரிமாதா கல்லூரி மாணவர்கள், விவசாயிகள் கலந்து கொண்டனர். பேராசிரியர் சேகர் நன்றி கூறினார்.

**வயல்வெளி மூலிகைகளை வளர்க்க தோட்டக்கலை தீவிரம்**

காரைக்குடி:மூலிகை அபிவிருத்தி திட்டத்தின் கீழ், மூலிகை பண்ணை அமைக்க தோட்டக்கலை துறையினர், விவசாயிகளை நாடி வருகின்றனர்.

தோட்டத்தில், வயல்வெளிகளில், கொசு விரட்டியாக பயன்பட்ட, மூலிகை செடிகள் காலப்போக்கில் மறைந்து விட்டன.

பல நோய்களை தீர்க்கும், எவ்வித பக்கவிளைவும் இல்லாத இவற்றுக்கு வெளிநாட்டில் வரவேற்பு உள்ளது.

நோயின் தாக்கத்தை கட்டுப்படுத்தவும், மூலிகை செடிகளுக்கு, அதிகரித்து வரும் வரவேற்பை கருத்தில் கொண்டு, தோட்டகலைத்துறை மூலம், மூலிகை

அபிவிருத்தி திட்டம் அமல்படுத்தப்படுகிறது.
மண்ணின் தன்மைக்கேற்ப, மூலிகை செடிகள் வளர்க்க ஆலோசனை வழங்கி, மூலிகை கன்றுகள் தரப்படுகிறது. கலப்பை கிழங்கு, மருந்து கூர்க்கன், அமுக்கரா, நிலவேம்பு, இசப்புகோல், மாகாலிவேர், வல்லாரை, மணத்தக்காளி, நெல்லி, நிலாவரை, நிலப்பணை கிழங்கு, சிறுகுறிஞ்சான், கீழாநெல்லி, கருந்துளசி, வசம்பு, சித்தரத்தை, ஆடாதோடை, கோலியாஸ், சென்னாஅவுரி, நித்திய கல்யாணி, கற்றாழை ஆகியவை வழங்கப்பட உள்ளது.
இம்மாவட்டத்தில், ஒன்றியத்திற்கு 10 எக்டேரில்,
மூலிகை பண்ணை அமைக்க திட்டமிட்டு, ஒரு எக்டேருக்கு ரூ.13 ஆயிரம் செலவில், 275 கன்றுகள் நடப்பட உள்ளது.
அந்தந்த, தோட்டக்கலை உதவி இயக்குனர் அலுவலகத்தில், விபரங்களை பெறலாம், என தோட்டக்கலைதுறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

**கரும்பு அரவை துவக்க விழா**

சிவகங்கை:படமாத்தூர் சக்தி சர்க்கரை ஆலையில், நடப்பு பருவத்திற்கான கரும்பு அரவை துவக்க விழா நடந்தது.முதுநிலை தலைவர் நடராஜன் தலைமை வகித்தார்.துணை தலைவர் ஆறுமுகம் முன்னிலை வகித்தார்.முன்னாள் எம்.எல்.ஏ.,ராஜசேகரன், மாவட்ட இணை இயக்குனர் (மருத்துவம்) மனோகரன்,பாண்டியன் கிராம வங்கி வட்டார மேலாளர் சங்கிலிபாண்டியன், பச்சேரி,பாங்க் ஆப் பரோடா வங்கி மேலாளர் இளங்கோவன் பங்கேற்றனர்.

**பனிப்பொழிவால் கருகிய புற்கள் வைக்கோல் விலை உயர்வு**

திருப்புத்தூர்:திருப்புத்தூரில் தற்போது பனிப்பொழிவால் புற்கள் கருகத் துவங்கியுள்ளன.மழை பொய்த்ததால், வைக்கோல் விலையும் உயர்ந்து, கால்நடைகள் உணவின்றி தவிக்கின்றன. திருப்புத்தூர் பகுதியில், கடந்த ஆண்டு, போதிய மழை இல்லாததால், எதிர்பார்த்த நெல் விளைச்சல் கிடைக்காமல் போனது. இந்தாண்டும், முற்றிலுமாக மழை பொய்த்ததால், கிணறு பாசனத்தை நம்பியவர்கள் மட்டுமே, சுமார் 5 சதவீத விவசாயம் செய்தனர்.
அவ்வப்போது,பெய்த சிறு மழையில், பெரும்பாலான சாகுபடி நிலங்களிலும், புன்செய் நிலங்களிலும், புற்கள் முளைத்து, கால்நடைகளுக்கு உணவாக

உதவின.கடந்த சில நாட்களாக கடும் பனிப் பொழிவு துவங்கியுள்ளதால், அந்தப் புற்களும் கருகத் துவங்கி விட்டன.

கிராமங்களில் மேய்ச்சலுக்கு செல்லும்,கால்நடைகள் மேய, புற்கள் இல்லாமல் தவிக்கின்றன.குடிக்கவும், கண்மாய்களில் நீரின்றி அலைகின்றன.

6 மாதங்களுக்கு முன்,வைக்கோல் ரூ.2 ஆயிரத்திற்கு விற்றது.தற்போது ரூ 8 ஆயிரத்திலிருந்து ரூ.10 ஆயிரம் வரை விற்கப்படுகிறது.தவிடும், ஒரு மூடை ரூ.250 லிருந்து ரூ.400 ஆக உயர்ந்து விட்டது.கால்நடைகளைப் பராமரிக்க, கூடுதலாக செலவழித்து, விவசாயிகள் மிகுந்த சிரமத்திற்குள்ளாகி வருகின்றனர்.

**நெற் கதிரின் மணிகள் மஞ்சள் நிறமாக இருந்தாலே அறுவடை வேளாண் துணை இயக்குனர் தகவல்**

விருதுநகர்: விருதுநகர் மாவட்டத்தில் நெல் அறுவடை பணி நடந்து வருகிறது. அறுவடையின் போது மற்றும் பாதுகாத்தல் தொடர்பாக, தொழில் நுட்பத்தை பயன்படுத்த வேண்டும் என, வேளாண் வணிக துணை இயக்குனர் முத்து முணியாண்டி கூறியுள்ளார்.

அவரது அறிக்கை:நெல் மணிகளுக்கு கூடுதல் விலை கிடைப்பது, முழு அரிசியில் தான் உள்ளது. நெல் மணிகள் அளவில் 62 சதவீதம் முழு அரிசி கிடைத்திட ,நெல் ரகங்களின் வயதிற்கேற்றவாறு, பயிரின் அறுவடையை உரிய காலத்தில் மேற்கொள்ள வேண்டும். நெற்கதிரின் மணிகள் 80 சதவீதம் மஞ்சள் நிறமாக மாறி இருந்தாலே, அறுவடையை தொடங்கி மணிகள் உதிர்வதை தடுக்கலாம்.

அறுவடையின் போது 19- 23 சதவீதம் ஈரப்பதம் இருக்க வேண்டும். அறுவடைக்கு பின், நெல்லை சுத்தம் செய்து காய வைக்க வேண்டும், இதில், 12 சதவீதம் ஈரப்பதம் இருக்க வேண்டும். அதிக ஈரப்பதம் இருந்தால், நெல்லில் பூஞ்சான் பரவி, தரம் பாதிக்கப்படும். நெல்லை சுத்தமான சாக்குபையில், நிரப்பி, தரையின் மீது, மரச்சட்டங்கள் அல்லது காய்ந்த வைக்கோலை பரப்பி, அதன் மேல் மூட்டைகளை அடுக்கி வைக்க வேண்டும். இதில், அந்து பூச்சி தாக்காமலிருக்க "மாலத்திலான்' மருந்தை ஒரு லிட்டருக்கு, 10 மில்லி மருந்து கலந்து, தரைபகுதி மற்றும் மூட்டைகளின் மீது தெளிக்க வேண்டும்," என, தெரிவித்துள்ளார்.

### தமிழகத்தில் முட்டை விலை 360 காசாக நிர்ணயம்



நாமக்கல்:தமிழகம், கேரளாவில் முட்டை விலை, 360 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

நாமக்கல், தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், 365 காசுகளுக்கு விற்பனை செய்யப்பட்ட முட்டை விலையை, ஐந்து காசுகள் குறைந்து, 360 காசாக நிர்ணயம் செய்வது என, முடிவு செய்யப்பட்டது.நாமக்கல், பண்ணையாளர், வியாபாரிகள் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், முட்டைக் கோழி விலை, 57 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பல்லடத்தில், நடந்த கறிக்கோழி உற்பத்தியாளர் ஒருங்கிணைப்பு கூட்டத்தில், அதன் விலை, 80 ரூபாயாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

### மீன் விலை உயர்வு



கீழக்கரை: மீன் வரத்து குறைவால், ராமநாதபுரம் மாவட்ட--ம் கீழக்கரை சந்தையில், விலை உயர்ந்துள்ளது. கீழக்கரை, பெரியபட்டினம், முத்துப்பேட்டை, மாயாகுளம், களிமண்குண்டு, ஏர்வாடி பகுதிகளில், மீன்பிடி நடகிறது.

சில நாட்களாக, வரத்து குறைவால், வியாபாரிகளிடையே ஏலம் எடுப்பதில், கடும் போட்டி நிலவுகிறது. இதனால், சாதாரண மீன் கூட விலை அதிகரித்துள்ளது. மீன் மார்க்கெட் வியாபாரிகள் சங்க தலைவர் நேவிஸ் கூறுகையில், கடலில் மழை இல்லாததால் மீன்வளம் குறைந்துள்ளது. சிறிய வகை மீன்களே அதிகம் கிடைக்கிறது. சில நாட்களாக மீனவர்கள், போதிய மீன்கள் கிடைக்காமல் ஏமாற்றத்துடன் திரும்பி வருகின்றனர், என்றார். **விலை, கிலோவில்:** கடந்த வாரம் 600க்கு விற்ற சீலா மீன் 700; 120 க்கு விற்ற வில மீன், 140;, 180க்கு விற்ற வால

மீன், 220; 160க்கு விற்ற ஊளா 200; 220க்கு விற்ற நண்டு, 280; 120க்கு விற்ற திருக்கை, 160; 30க்கு விற்ற சூடை, 50 ரூபாய்.

**நல்லெண்ணெய், தே.எண்ணெய்விலை கிடு கிடு உயர்வு**



சேலம்:தமிழகத்தில், கொப்பரை தேங்காய், எள்ளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால், நல்லெண்ணெய், தேங்காய் எண்ணெய் ஆகியவற்றின் விலை உயர்ந்து வருகிறது.தமிழகத்தில், கடந்த ஆண்டு போதிய மழை பெய்யாததால், எள் விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளது.

கர்நாடகா, ஆந்திரா, மேற்கு வங்கம் ஆகிய மாநிலங்களின், எள்ளை எதிர்பார்க்க வேண்டிய நிலை ஏற்பட்டது. மத்திய அரசு வெளிநாடுகளுக்கு எள், கொப்பரை தேங்காய் ஆகியவற்றின் ஏற்றுமதிக்கு அனுமதி வழங்கியுள்ளது. இதனால், தமிழக எண்ணெய் ஆலைகளுக்கு வந்து கொண்டு இருந்த எள், வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகிறது. உள்நாட்டில் எள் வரத்து குறைவால், அதன் விலை அதிகரித்துள்ளது. டிசம்பர் மாதம் முதல் வாரத்தில், வெள்ளை எள் கிலோ, 140 ரூபாய்க்கு விற்றது, 160 ரூபாயாக உயர்ந்தது. இது, டிசம்பர் மூன்றாவது வாரத்தில் 180 ரூபாயாக அதிகரித்தது.  இதே காலத்தில், கறுப்பு எள் கிலோ, 110லிருந்து, 150 ரூபாயாக உயர்ந்துள்ளது. அது போன்று, பிரபல நிறுவன தயாரிப்பு ஆலைகளில், உற்பத்தியாகும் எண்ணெய் விலை, லிட்டருக்கு, 50 ரூபாய் உயர்ந்துள்ளது.ஒரு லிட்டர் நல்லெண்ணெய் விலை, 245லிருந்து, 295 ரூபாய்க்கும், உள்ளூர் தயாரிப்பு எண்ணெய், 190லிருந்து, 240 ரூபாயாகவும் அதிகரித்துள்ளது.

நல்லெண்ணெய் விலை, டிசம்பர் மாதத்தில் மட்டும் லிட்டருக்கு, 75 ரூபாய் உயர்ந்துள்ளது. தேங்காய் எண்ணெய் விலை, லிட்டருக்கு, 50 ரூபாய் உயர்ந்துள்ளது.பிரபல தயாரிப்பு நிறுவனங்களின் தேங்காய் எண்ணெய் லிட்டர், 115 ரூபாய்க்கு விற்றது, 165 ரூபாயாகவும், உள்ளூர் ஆலை தயாரிப்பு எண்ணெய் லிட்டர், 90 ரூபாய்க்கு விற்றது, 140 ரூபாயாகவும் அதிகரித்துள்ளது.

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

### பல்லாரி விலை சரிவு

மதுரை, : மதுரை சென்ட்ரல் மார்க்கெட்டில் வரத்து அதிகரிப்பால் பல்லாரி வெங்காயம் விலை கிலோ ரூ.25ஆக குறைந்துள்ளது.

மதுரை சென்ட்ரல் மார்க்கெட்டில் காய்கறிகளின் நேற்றைய விலை நிலவரம் (கிலோ, ரூபாயில்): நாட்டு தக்காளி-10, கத்தரிக்காய்-30, வெண்டைக்காய்-20, பல்லாரி-25, சின்ன வெங்காயம்-35, உருளைக்கிழங்கு-30, சேப்பங்கிழங்கு-40, கருணை-40, கேரட்-25, பீட்ரூட்-20, பட்டர்பீன்ஸ்-80, சோயாபீன்ஸ்-80, பச்சை பட்டாணி-35, முருங்கை பீன்ஸ்-25, நூக்கல்-20, முள்ளங்கி-15, அவரை-25, மிளகாய் -20, சுரைக்காய்-12, சவ்சவ்-10, சீனி அவரைக்காய்-20, வெள்ளைபூசணி-12, சர்க்கரை பூசணி-12, கருவேப்பிலை-30, கொத்தமல்லி-30, புதினா-15, காலிபிளவர்-15, பீர்க்கங்காய்-25, முட்டைக்கோஸ்-10, புடலங்காய்-15, பெரிய பாகற்காய்-25, இஞ்சி-90, பச்சை மொச்சை-30, சிறுகிழங்கு-30, கீரை வகைகள் 15.

காய்கறி மொத்த வியாபாரி சேதுபதி கூறுகையில், 'கடந்த சில மாதங்களாக பல்லாரி மற்றும் சின்ன வெங்காயம் கிலோ ரூ.100 வரை விற்கப்பட்டது. தற்போது வரத்து அதிகரிப்பால் பல்லாரி வெங்காயம் கிலோ ரூ.25க்கும், சின்ன வெங்காயம் கிலோ ரூ.35க்கும் விற்கப்படுகிறது' என்றார்.

**கின்னூர் ஆரஞ்ச் விலை குறைப்பு**

கோவை, : கோவை மாவட்டத்தில் கடந்த சில வாரங்களாக நாக்பூர் ஆரஞ்ச் வரத்து அதிகமாக இருந்தது. கடந்த 3 மாதத்திற்கு முன் ஆரஞ்ச் விலை கிலோ 60 ரூபாய் முதல் 80 ரூபாய் வரை இருந்தது. வரத்து அதிகமானதை தொடர்ந்து விலை குறைந்தது. தற்போது ஒரு கிலோ ஆரஞ்ச் கிலோ 40 ரூபாய் முதல் 50 ரூபாய் வரை விற்கப்படுகிறது. இதேபோல் கின்னூர் ஆரஞ்ச் வரத்து தற்போது அதிகமாகி விட்டது. இந்த ஆரஞ்ச் கிலோ 40 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. கடந்த மாதம் கின்னூர் ஆரஞ்ச் விலை கிலோ 70 ரூபாயாக இருந்தது. வரும் ஜனவரி மாதம் வரை ஆரஞ்ச் சீசன் அதிகமாக இருக்கும். விலை குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**'பால் விலையை உயர்த்த மாட்டோம்'**

புதுச்சேரி, : சட்ட சபையில் கேள்வி நேரத்தில் நடந்த விவாதம்:
லட்சுமிநாராயணன்(காங்): பால் உற்பத்தியை பெருக்க ஆக்கபூர்வமான திட்டம் அரசிடம் உள்ளதா? பால் பற்றாக்குறையை போக்க புரட்சி திட்டம் உண்டா? பாண்லேவை லாபகர மாக்கும் திட்டம் உள்ளதா?
முதல்வர் ரங்கசாமி: கால்நடை கலப்பின உற்பத்தி திட்டத்தில் அடுத்த தலைமுறை உற்பத்திக்கான கன்றுகள் உற்பத்தி திறன் மேம்படுத்தப்படுகிறது. தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் அண்டை மாநிலங்களிலிருந்து கறவை மாடுகள் பெறப்பட்டு விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது. அடுத்த 5 ஆண்டுகளில் பால் பண்ணையை விரிவாக்கம் செய்து உற்பத்தியை அதிகரித்தல், உற்பத்தி செலவை குறைத்தல், மற்றும் பால் விற்பனை விலையை அதிகப்படுத்துதல் போன்ற திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும். லட்சுமிநாராயணன்: பால் விலையை உயர்த்துவதாக குண்டை தூக்கி போடுகிறீர்கள். பால் உற்பத்தியை அதிகரிக்க வழி செய்யுங்கள். முதல்வர் ரங்கசாமி: பால் விலையை உயர்த்தும் எண்ணம் தற்போது

இல்லை. வரும் காலத்தில் பால் உற்பத்தியை பெருக்க வேண்டும். பால் பண்ணை வைக்கும் ஆர்வத்தை இளைஞர்களிடம் உருவாக்க வேண்டும். நமது சீதோஷ்ண நிலைக்கு மாடுகள் இறந்து போகிறது. விவசாய விளைநிலங்கள் குறைந்து விட்டது. எனவே சிறிய மாட்டு பண்ணை வைத்து பால் உற்பத்தியை அதிகரிக்க முடியும். நமச்சிவாயம்(காங்): தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் எத்தனை வகையான மாடுகள் வாங்க மத்திய அரசு எவ்வளவு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. தேனிஜெயக்குமார்(காங்): பால் உற்பத்தியை பெருக்குவதாக கூறி நிறைய செலவு செய்யப்பட்டுள்ளது. 3 பேர் கொண்டு விவசாய கமிட்டி போடுங்கள். அவர்கள் மாடு வாங்கி வரட்டும். இளைஞர்கள் மாட்டு பண்ணை வைக்க தயாராக உள்ளனர். அவர்களை பயன்படுத்தி கொள்ள வேண்டும்.
அசோக் ஆனந்த் (என்ஆர்.காங்): குஜராத்தில் மாடுகள் வளர்க்க சுயஉதவிக்குழுக்களுக்கு கடன் கொடுக்கிறார்கள். மாடுகளை பராமரிக்க பெரிய குடோன் வசதி செய்து கொடுக்கிறார்கள். அதில் வரும் லாபத்தை இருவரும் பங்கிட்டு கொள்கிறார்கள். ஒரு கமிட்டி அனுப்பி அதனை பார்த்து வரவேண்டும். இங்கும் நகரப்பகுதியில் இடம் ஒதுக்கி மாடுகள் வளர்க்கலாம்.புருஷோத்தமன் (அதிமுக): பால் உற்பத்தியை பெருக்க அரசே மாட்டு பண்ணையை நடத்தலாம்.

**கால்நடைகளுக்கு மானிய விலையில் உலர் தீவனம்**

திருவாரூர், : திருவாரூர் மாவட்டத்தில் மானிய விலையில் உலர் தீவனங்கள் ரூ.2க்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது என்று கலெக்டர் நடராஜன் தெரிவித்துள்ளார். இதுகுறித்து திருவாரூர் கலெக்டர் நடராஜன் விடுத்துள்ள செய்திகுறிப்பில் தெரிவித்துள்ளதாவது: கால்நடைகளுக்கு தேவையான உலர் தீவனத்தை மானிய விலையில் வழங்க தமிழக முதல்வர் உத்தரவிட்டுள்ளார். அதன்படி. திருவாரூர் மாவட்டத்தில் நன்னிலம், நீடாமங்கலம், வேப்பஞ்சேரி ஆகிய ஊர்களில் உள்ள கால்நடை மருந்தங்களில் மானிய விலையில் உலர் தீவனங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. ஒரு கிலோ ரூ. 2க்கு விற்பனை செய்யப்படுகிறது. உலர் தீவனத்தை கால்நடை வளர்ப்போர் ஊர்களில் உள்ள

கால்நடை மருந்தங்களில், தங்களது குடும்ப அட்டையின் நகலை அளித்து உலர் தீவன அட்டையை பெற்றுக் கொள்ளலாம். மேலும் கால்நடை ஒன்றுக்கு மூன்று கிலோ உலர் தீவனம் வீதம் ஒரு குடும்பத்தில் அதிக பட்சமாக 5 கால்நடைகளுக்கு வழங்கப்படும். இந்த தீவனத்தை ஒரு வார காலத்திற்கு ஒரே நேரத்திலும் பெற்றுக் கொள்ளலாம். இவ்வாறு கலெக்டர் நடராஜன் தெரிவித்துள்ளார்.

**பசுந்தேயிலைக்கு குறைந்தபட்ச விலை மதசார்பற்ற ஜனதா தளம் கோரிக்கை**

ஊட்டி, : மதசார்பற்ற ஜனதா தளம் மாநில செயலாளர் போஜன் தமிழக முதல்வருக்கு அனுப்பியுள்ளன மனுவில் கூறியிருப்பதாவது:

நீலகிரி மாவட்டத்தில் உள்ள 65 ஆயிரம் சிறு மற்றும் குறு தேயிலை விவசாயிகள் 20 ஆண்டுகளாக உற்பத்தி செய்யும் பசுந்தேயிலைக்கு குறைந்தபட்ச விலை கிடைக்க வேண்டி போராட்டம் நடத்தி வருகிறோம். உரிய விலை கிடைக்காத நிலையில், பொருளாதார ரீதியாக தொடர்ந்து பின் தங்கிய நிலையில் உள்ளோம். இரண்டு முறை எங்களுக்கு மானியம் வழங்கி சிறு குறு விவசாயிகளை காப்பாற்றியுள்ளீர்கள். குன்னூர் இன்ட்கோ சர்வ் மூலம் கணினி முறையில் முதல் முறையாக ஏல மையத்தை குன்னூரில் நிறுவி மொத்த கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளை அழிவில் இருந்து காப்பாற்றியுள்ளீர்கள்.

இந்நிலையில், நஞ்சநாட்டை சுற்றியுள்ள 12 கிராம விவசாயிகளின் நலன் கருதி, அங்கு தேயிலை தொழிற்சாலை அமைக்க உத்தரவிட்டுள்ளீர்கள். மேலும் அதற்காக ரூ.5 கோடி ஒதுக்கீடு செய்துள்ளீர்கள். இத்தொழிற்சாலை 6 மாதத்திற்குள் கட்டி முடிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அதே போல், மூன்றாம் முறையாக விவசாயிகளுக்கு மானியம் வழங்க வேண்டும். கூலி மற்றும் இடு பொருட்களின் விலை உயர்வால் மிகவும் சிரமப்பட்டு வருகிறோம். எனவே, முதல்வர் எங்களுக்கு கிலோ ஒன்றுக்கு ரூ.20 வழங்கி உத்தரவு பிறப்பிக்க வேண்டும். இவ்வாறு அந்த மனுவில் போஜன் கூறியுள்ளார்.

**வறட்சி பகுதியாக அறிவிக்க வலியுறுத்தல்**

சிவகங்கை, : காளையார்கோவில் பகுதியில் நாட்டரசன்கோட்டை, மல்லல், காளையார்கோவில், மறவமங்கலம், பாகனேரி உள்ளிட்ட ஐந்து பிர்க்காக்கள் உள்ளன. இதில் சுமார் முப்பதாயிரம் ஏக்கருக்கும் மேற் பட்ட நிலங்களில் கடந்த மூன்று மாதங்களாக அவ்வப்போது பெய்த மழையை நம்பி விவசாயப் பணிகள் நடைபெற்றன. போதிய மழை இல்லாததால் விவசாய நிலங்களில் நெற்பயிர்கள் கருக தொடங்கி விட்டன. இது குறித்து விவசாயிகள் சங்க ஒன்றிய நிர்வாகி சலையத்ராஜ் கூறுகையில், கடந்த மாதம் புயல் நேரத்திலும் இப்பகுதியில் போதிய மழை இல்லை.

இருப்பினும் தாமதமான மழை பெய்யும் என்ற நம்பிக்கையில் விவ சாய பணிகள் செய்தோம். ஆனால் போதிய மழை இல்லாததால் பயிர்கள் முழுமையாக கருகி விட்டது. இப்பகுதியில் கிணற்று பாசனம் இல்லாததால் மழையை நம்பி மட்டுமே விவசாயம் செய்யப்பட்டு வருகிறது.

ஒரு சில விவசாயிகள் கண்மாய்களில் கிடந்த சிறிதளவு நீரை குடங்களில் எடுத்து வந்து நிலங்களுக்கு ஊற்றி பயிர்களை காப் பாற்ற முயற்சி செய்தனர். ஆனால் பயிர்களை காப்பாற்ற முடியவில்லை. எனவே இப்பகுதியை முழு மையாக வறட்சி பாதித்த பகுதியாக அறிவித்து போ திய இழப்பீடு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**காட்டுமன்னார்கோவிலில் விவசாயிகள் ஆர்ப்பாட்டம்**

காட்டுமன்னார்கோவில்: கடலூர் மாவட்டம் கொள்ளிடம் கீழணை பாசன விவசாய சங்கம் சார்பில் காட்டுமன்னார்கோவில் பஸ் நிலையத்தில் புறப்பட்ட பேரணி முக்கிய வீதிகள் வழியாக தாலுகா அலுவலகம் வந்தபோது திடீரென ஆர்ப்பாட்டம் நடந்தது. இதில் நெல் குவிண்டாலுக்கு ரூ.3 ஆயிரம் மத்திய, மாநில அரசுகள் வழங்க வேண்டும். நெற்பயிர்களுக்கு தடையின்றி தண்ணீர் வழங்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டது. இந்த ஆர்ப்பாட்டத்தில் ஆயிரக்கணக்கா னோர் கலந்து கொண்டனர். முன்னதாக, நெல் மூட்டைக்கு பட்டை நாமம் போட்டு ஊர்வலமாக எடுத்துச் சென்றனர்.

**ஆத்தூரில் ரூ.1.50 கோடி பருத்தி ஏலம்**

ஆத்தூர்: ஆத்தூர் வேளாண்மை கூட்டுறவு விற்பனை சங்கத்தில் ரூ.1.50 கோடிக்கு பருத்தி விற்பனையானது. ஆத்தூர் புதுப்பேட்டையில் வேளாண்மை கூட்டுறவு விற்பனை சங்கம் செயல்பட்டு வருகிறது. இந்த சங்கத்தில் நேற்று பருத்தி ஏலம் நடைபெற்றது. இந்த ஏலத்தில் சேலம், பெரம்பலூர், விழுப்புரம், கடலூர், நாமக்கல் ஆகிய பகுதிகளில் இருந்து விவசாயிகள் 7 ஆயிரம் பருத்தி மூட்டைகளை விற்பனைக்கு கொண்டு வந்தனர். ஏலத்தில் சேலம், திருப்பூர், கோவை, ஈரோடு, திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களில் இருந்து வியாபாரிகள் கலந்து கொண்டனர்.

ஆர்சிஎச் குவிண்டால் ரூ.4,469 முதல் ரூ.5,199 வரையும், டிசிஎச் ரூ.6,326 முதல் ரூ.6,959 வரை விற்பனையானது. மொத்தம் ரூ.1.50 கோடி அளவிற்கு வர்த்தகம் நடந்தது. கடந்த வாரத்தைவிட இந்த வாரம் ஆர்சிஎச் ரூ.500 வரையிலும், டிசிஎச் ரூ.1000 வரை விலை கூடுதலாக கிடைத்தது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**இயற்கை வேளாண் விஞ்ஞானி நம்மாழ்வார் உடல்நலக் குறைவு காரணமாக மரணம்**



தஞ்சாவூர்,

இயற்கை வேளாண் விஞ்ஞானி நம்மாழ்வார் உடல்நலக் குறைவு காரணமாக மரணம் அடைந்தார். அவருக்கு வயது 75. பட்டுக்கோட்டை அருகே அத்திவெட்டி என்ற கிராமத்தில் அவரது உயிர் பிரிந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. காவிரி படுகையில் மத்திய அரசு மீதேன் வாயு எடுக்கும் திட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து நடைபெற இருந்த போராட்டத்தில் கலந்து கொள்ள அவர் அங்கு சென்ற போது உயிரிழந்துள்ளார். அவரது உடல் நாளை கரூர் மாவட்டம் கடவூர் வானகத்தில் அடக்கம் செய்யப்படுகிறது. நம்மாழ்வார் தஞ்சாவூர் மாவட்டம் இளங்காடு என்ற கிராமத்தில் 1938ம் ஆண்டு பிறந்தவர். அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் வேளாண்மை பட்டப்படிப்பு படித்தார். 1963ம் ஆண்டு கோவில்பட்டியில் மண்டல வேளாண் ஆராய்ச்சி நிறுவனத்தில் பணியாற்றினார். இயற்கை வேளாண் விழிப்புணர்வுக்காக பல்வேறு விருதுகளை நம்மாழ்வார் பெற்றுள்ளார்.

**நாமக்கல் மண்டலத்தில் முட்டை விலை 5 காசுகள் குறைந்தது 360 காசுகளாக நிர்ணயம்**



நாமக்கல் மண்டலத்தில் முட்டை கொள்முதல் விலை கடந்த சில நாட்களாக 365 காசுகளாக நீடித்து வந்தது. இந்த நிலையில் நேற்று நாமக்கல்லில் நடந்த தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் முட்டை கொள்முதல் விலையை 5 காசுகள் குறைக்க முடிவு செய்தனர். எனவே முட்டை கொள்முதல் விலை 360 காசுகளாக குறைந்து உள்ளது. பிற மண்டலங்களில் முட்டை விலை (காசுகளில்) வருமாறு:– சென்னை– 390, ஐதராபாத்– 381, விஜயவாடா, தனுகு– 385, பார்வாலா– 386, மும்பை– 419, மைசூர்– 380, பெங்களூர்– 390, கொல்கத்தா– 413, டெல்லி– 408. கறிக்கோழி கிலோ ரூ.80–க்கும், முட்டைக்கோழி கிலோ ரூ.57–க்கும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. அவற்றின் விலைகளில் மாற்றம் செய்யப்படவில்லை.

**கரும்பு டன் ஒன்றுக்கு ரூ.5 ஆயிரம் விலை நிர்ணயம் செய்ய வேண்டும் தமிழக விவசாயிகள் சங்கம் வலியுறுத்தல்**



கிருஷ்ணகிரி

கரும்பு டன் ஒன்றுக்கு ரூ.5ஆயிரம் விலை நிர்ணயம் செய்ய வேண்டும் என்று தமிழக விவசாயிகள் சங்கம் மாநில அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளது.

## இழப்பீடு

கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டணத்தில், இறந்த கால்நடைகளுக்கு இழப்பீடு வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. தமிழக விவசாயிகள் சங்க செயலாளர் பாஸ்கர் தலைமை தாங்கினார். மத்திய மாவட்ட துணைச் செயலாளர்கள் ராஜா, டி.பி.சி. எழுத்தாளர் முரளி ஆகி யோர் முன்னிலை வகித்தார் கள். மாநில பொதுச் செயலா ளர் ராமகவுண்டர், இறந்த கால்நடைகளின் உரிமை யாளர்களுக்கு இழப்பீடுக்கான காசோலைகளை வழங்கி பேசி னார்.

கூட்டத்தில், தமிழக அரசு பாலுக்கு அறிவித்த விலை உயர்வு போதுமானதாக இல்லை. விற்பனை விலைக்கும் உற்பத்தியார்களுக்கு கொடுக் கும் விலைக்கும் ரூ.7 வித்தி யாசம் உள்ளது. இதை உற்பத்தி யாளர்களுக்கே வழங்கி தொடக்க சங்கத்தையும், ஒன்றியத்தையும் காக்க வேண்டிய பொறுப்பு ஆவின் இணையத்திற்கும் தமிழக அரசுக்கும் உள்ளது என்றும் எனவே பால் விலையை உயர்த்த வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டது.

## கரும்பு விலை

தமிழகத்தில் முன்பு சுமார் 13 லட்சம் ஏக்கருக்கு மேல் கரும்பு சாகுபடி செய்யப்பட்டு வந்தது. ஆனால் இந்த ஆண்டு அரசு புள்ளி விவரப்படியே 8 லட்சம் ஏக்கரில் தான் கரும்பு சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இது 40 சதவீத உற்பத்தி குறைவாகும். கரும்பு சாகு படியை விவசாயிகள் விட்டு விட்டு மாற்று பயிர் சாகுபடி செய்துவருவதையே இது காட்டுகிறது. இதற்கு காரணம் கரும்புக்கு உரிய விலை கிடைக்காததே ஆகும். கடந்த ஆண்டு கரும்புக்கு மத்திய அரசு கொடுத்த ஆதார விலை யுடன் தமிழக அரசு சேர்த்துக் கொடுத்த தொகையை காட்டியிலும் இந்த ஆண்டு குறைத்து இருப்பதாகவும் இது விவசாயிகளை ஏமாற்றமடைய செய்துள்ளது என்றும் கூட்டத் தில் தெரிவிக்கப்பட்டது. எனவே கரும்பு விலையை 8.0 சர்க்கரை சத்துக்கு டன் ஒன்றுக்கு ரூ.5 ஆயிரம் விலை நிர்ணயம் செய்ய வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டது. கூட்டத்தில் தமிழக விவசாயி கள் சங்க நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டார்கள்.

**பொங்கல் பண்டிகையை முன்னிட்டு நெகமத்தில் மஞ்சள் விளைச்சல் அமோகம்**



நெகமம்,

பொங்கல் பண்டிகையை முன்னிட்டு நெகமம் பகுதியில் மஞ்சள் உற்பத்தி அதிகரித்து உள்ளது.

மஞ்சள்

தமிழர்களின் முக்கிய பண்டி கையான தைப் பொங் கல் பண்டிகையில் மஞ்சள் குலை முக்கிய பங்கு வகிக் கிறது. மஞ்சள் குலையை பொங்கல் பானையில் கட்டி வைத்து பொங்கல் இடுவது வழக்கம். மேலும் மஞ்சள் குலை வைத்து படையிலிட்டு சாமி கும்பிடுவதும் தொண்டு தொட்டு வரு கிறது. இதன் காரணமாக மஞ்சள் குலையின் விற்பனை அதிகமாக இருக்கும்.

நெகமம் பகுதியில் உள்ள வடசித்தூர், மன்றாம் பாளையம், செட்டியக் காபாளையம், எம்மேகவுண் டன்பாளையம், சேரிபாளை யம், ஆண்டிபாளையம், சின்னநெகமம், உதவி பாளையம், செஞ்சேரி மலை, மலைப்பாளையம் உள்பட பல கிராமங்களில் 10 மாதம் விளையும் பயிரான மஞ்சளை நடவு செய்து உள்ளனர். இவைகள் தற்போது அறு வடைக்கு தயார் நிலையில் உள்ளன. மஞ்சள் குலைகள் நன்கு வளர்ந்து தோட்டங்களில் பசுமையாக காட்சி அளிக்கின்றன.

<u>உற்பத்தி அமோகம்</u>

கடந்த ஆண்டு வறட்சி காரணமாக மஞ்சள் உற்பத்தி குறைவாக இருந்தது. இதனால் விலை அதிகமாக இருந்தது. ஆனால் இந்த ஆண்டு நெகமம் பகுதியில் மஞ்சள் உற்பத்தி அமோகமாக உள்ளது. இதனால் விலை குறை யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இது குறித்து விவசாயிகள் ஒருவர் கூறியதாவது:–

கடந்த ஆண்டை ஒப்பிடுகையில் இந்த ஆண்டு மஞ்சள் உற்பத்தி அமோகமாக உள் ளது. பயிரிட்ட எல்லா இடங்களிலும் நல்ல விளைச் சலை தந்துள்ளது. இதன் காரணமாக வியாபாரி கள் நாங்கள் எதிர்பார்த்ததை விட குறைந்த விலைக்கே கேட் கின்றனர். இது எங்களுக்கு கட்டுப்படி ஆகாது. காரணம் மஞ்சள் பயிரை வளர்ப்பது மிகவும் கஷ்டம். 10 மாதம் கவனித்து வளர்க்க வேண்டும். மஞ்சள் விதைப்பதற்கு முன் குழி தோண்டவும். மண் குவிக்கவும் பணியாளர்கள் கிடைப்பது இல்லை. 10 மாதத்தில் 8 முறை 'களை' எடுக்க வேண்டும். இதற்கு அதிக கூலி கொடுக்க வேண் டும். தற்போது பருவமழை பெய்ததாலும், பி.ஏ.பி.நீர் வந்ததாலும், கிணற்றுநீர் அதிகரித் ததாலும் மஞ்சள் நன்கு விளைந்து உள்ளது. இதை வியாபாரிகள் விலைக்கு வாங்கி கொண்டு பொள் ளாச்சி, கோவை, திருப்பூர், உடுமலை, பல்லடம், காரணம் பேட்டை, சோமனூர் உள் ளிட்ட பகுதிகளுக்கு கொண்டு சென்று விற் பனை செய்வார் கள். கடந்த ஆண்டு பொங் கலை விட இந்த ஆண்டு பொங்கலுக்கு சற்று குறைந்த விலையில் மஞ்சள் குலை கிடைக்க வாய்ப்பு இருக் கிறது.n இவ்வாறு அவர்கள் கூறினார்கள்.

**கூட்டுறவு சர்க்கரை ஆலையில் கரும்பு அரவை பணி முதல்-அமைச்சர் ரங்கசாமி தொடங்கி வைத்தார்**



கரும்பு அரவை பணியை முதல்-அமைச்சர் ரங்கசாமி தொடங்கி வைத்தபோது எடுத்த படம்.

திருக்கனூர்,

புதுவை மாநிலம் லிங்காரெட்டிப்பாளையத்தில் உள்ள புதுவை கூட்டுறவு சர்க்கரை ஆலையில் கரும்பு அரவை பணியை முதல்-அமைச்சர் ரங்கசாமி நேற்று பூஜை செய்து தொடங்கி வைத்தார்.

<u>அரவை பணி</u>

புதுவை மாநிலம் திருக்கனூரை அடுத்த லிங்காரெட்டிப்பாளையத்தில் கூட்டுறவு சர்க்கரை ஆலை உள்ளது. இந்த ஆலையில் நடப்பு ஆண்டுக்கான (2013-2014) கரும்பு அரவைப் பணி தொடக்க நிகழ்ச்சி நேற்று காலை நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு துணை சபாநாயகர் டி.பி.ஆர்.செல்வம், ஆலை சேர்மன் சூரன், நிர்வாகக்குழு உறுப்பினர்கள் ஞானசேகரன், அரியபுத்திரி ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஆலையின் மேலாண் இயக்குனர் ராஜசேகர் வரவேற்றார்.

<u>முதல்-அமைச்சர்</u>

நிகழ்ச்சிக்கு முதல்-அமைச்சர் ரங்கசாமி தலைமை தாங்கி, பூஜைகள் செய்து கரும்பு அரவை பணியை தொடங்கி வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில் ஆலையின் தலைமை கரும்பு அதிகாரி தெய்வசிகாமணி, தலைமை பொறியாளர் பாரதிதாசன் மற்றும் ஆலை அதிகாரிகள், தொழிலாளர்கள், கரும்பு விவசாயிகள் உள்பட பலர் கலந்துகொண்டனர்.

<u>கோரிக்கை</u>

சர்க்கரை ஆலை நிகழ்ச்சியில் பங்கேற்க வந்த முதல்-அமைச்சர் ரங்கசாமியை அனைத்து கரும்பு விவசாயிகள் சங்க செயலாளர் வக்கீல் செந்தில்குமார், தட்சிணாமூர்த்தி, திருமால் உள்ளிட்ட கரும்பு விவசாயிகள் சந்தித்து ஒரு கோரிக்கை மனு கொடுத்தனர். அந்த மனுவில் நடப்பு ஆண்டு (2013-2014)

சர்க்கரை ஆலைக்கு அனுப்பும் கரும்புக்கு டன்னுக்கு ரூ.3 ஆயிரத்து 500 விலை நிர்ணயம் செய்து வழங்க வேண்டும், கரும்பு எடைபோடும் பிரிவில் நடைபெறும் முறைகேடுகளை தடுக்க, அங்கு கண்காணிப்பு கேமரா பொருத்த வேண்டும், ஆலைக்கு அனுப்பும் கரும்புக்கு உண்டான தொகையை 15 நாட்களுக்குள் வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் வைக்கப்பட்டு இருந்தன

**மணிமுக்தா அணை நிரம்பாததால் 5 ஆயிரம் ஏக்கரில் விவசாயம் பாதிப்பு**



கள்ளக்குறிச்சி,

மணிமுக்தா அணையில் தண்ணீர் நிரம்பாததால் கள்ளக்குறிச்சி பகுதியில் 5 ஆயிரம் ஏக்கரில் விவசாய பணிகள் பாதிக்கப்பட்டு உள்ளது.

<u>மழை ஏமாற்றம்</u>

விழுப்புரம் மாவட்டத்தின் முக்கிய அணைகளாக கோமுகி, மணிமுக்தா அணை கள் உள்ளது. இதன் மூலம் கள்ளக்குறிச்சி பகுதியில் 16 ஆயிரம் ஏக்கர் விவசாய நிலம் பயன்பெறுகிறது.

கடந்த ஆண்டு போதிய பருவமழை பெய்யாததால் அணைகளில் இருந்து குறைந்த நாட்களுக்கே விவசாய பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்பட்டது. இதனால் கடைமடை பகுதி விவசாயிகள் பாதிக்கப்பட்டனர்.

21.30 அடி நீர்மட்டம்

இந்த ஆண்டு நல்ல மழை பெய்யும் என்று விவசாயிகள் எதிர்பார்த்து இருந்தனர். ஆனால் கடந்த ஆண்டை போல் மழை ஏமாற்றிவிட்டது. இதனால் கோமுகி அணை, மணிமுக்தா அணைகள் நிரம்பவில்லை.

மணிமுக்தா அணையில் வாய்க்காலை திறக்க குறைந்த பட்சம் 23 அடியாக நீர்மட்டம் இருக்கவேண்டும். ஆனால் அணையின் நீர் மட்டம் 21.30 அடியாக உள்ளது. எனவே இந்த ஆண்டு விவசாய பாசனத்துக்கு தண்ணீர் திறப்பது சந்தேகம் என்று விவசாயிகள் கூறு கின்றனர்.

விவசாயம் பாதிப்பு

இதனால் அணை பாசனத்தை நம்பியுள்ள அகரக் கோட்டாலம், அணைக் கரை கோட்டாலம், தண்டலை, பெருவங்கூர், வீர சோழபுரம், நீலமங்கலம், மாடூர், நிறைமதி, குரூர் மற்றும் பல்லகச்சேரி, பானையங்கால், கொங்கராயப்பாளையம், கூத்தக்குடி உள்பட 20–க்கும் மேற்பட்ட கிராமங்களில் 5 ஆயிரம் ஏக்கரில் விவசாயம் பாதிக்கப்பட்டு உள்ளது.

**வேளாண்மையில் எந்திர மயமாக்குதல் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது கலெக்டர் தகவல்**



கரூர்,

வேளாண்மை துறையில் எந்திர மயமாக்குதல் திட்டம் செயல்படுத் தப்பட்டு வருகிறது என்று கலெக்டர் ஜெயந்தி தெரிவித்து உள்ளார்.

கரூர் மாவட்டத்தில் நீர்வள, நிலவளத் திட்டத்தின் கீழ் 13 உலர் கலங்கள் மற்றும் 4 கிட்டங்கிகள்அமைக்கும் பணி நடந்து வருகிறது. இதுகுறித்து கலெக்டர் ஜெயந்தி விடுத்துள்ள செய்தி குறிப்பில் கூறி இருப்பதாவது:-

மானியத்தில் கருவிகள்

தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்ட மூலம் வேளாண்மையை எந்திர மய மாக்குதல் திட்டம் செயல் படுத்தப்பட்டு வருகிறது. நடப்பு நிதியாண்டில் இந்த திட்டத்திற்கு என ரூ.53 லட்சத்து 35 ஆயிரம் நிதி பெறப்பட்டு 50 சதவீத மானியத்தில் கருவிகள் வழங்கபட்டு வருகிறது. கதிரடிக்கும் எந்திரம், களை எடுக்கும் எந்திரம், மினி டிராக்டர், பவர் ஸ்பிரேயர், பவர் டில்லர், சுழல் கலப்பை, தட்டு வெட்டும் கருவி போன் றவைகள் ரூ.8 லட்சம் மானியத் தில் 27 விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு உள்ளது. மேலும் தேவைப்படும் விவசாயிகள் கரூர் மற்றும் குளித்தலை கோட்ட உதவி செயற்பொறியாளர் வேளாண் பொறியியல் துறையினரை அணுகி பயன்பெறலாம். வேளாண் வணிகத்தில் அறுவடைக்கு பின்னர் செய் நேர்த்தி தொழிற்பயிற்சி 15 முதல் 25 விவசாயிகளுக்கு வட்டாரம் வாரியாக வழங்கப்பட்டது.

உலர் களங்கள் தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தில் 8 உலர்களம் கட்டுமான பணிகள் முடி வடைந்து பஞ்சாயத்து தலை வர்களிடம் ஒப்படைக்கப் பட்டு உள்ளது. நீர்வளம், நிலவளத் திட்டத்தின்கீழ் 13 உலர்கலங்கள் மற்றும் 4 கிட்டங்கிகள் அமைக்கும் பணி தொடங்கி பணிகள் நடைபெற்று வருகிறது.

தேசிய உணவு பதப்படுத்தும் இயக்கத்தில் தொழில் முனைவோர் பயிற்சி நடத்துவதற்காக தொண்டு நிறுவனங்களிடம் இருந்து கருத்துக்கள் வரவேற்கப் படுகின்றன. மதுரை மனையியல் கல்லூரியில் முருங்கை மற்றும் சிறுதானியங்கள் மதிப்பு கூட்டப்பட்ட பொருட்கள் தயாரித்தலுக்கான பயிற்சியில் தாந்தோணி வட்டாரத்தில் உள்ள விவசாயிகள் கலந்து கொண்டு பயன் பெற்றனர். இவ்வாறு அவர் கூறி உள்ளார்.

**ஒட்டாண்குளம் கரை சீரமைக்கப்படுமா? விவசாயிகள் கோரிக்கை**



கூடலூர் ஒட்டாண்குளம் கரை முள்புதர் அடர்ந்து காட்சி அளிப்பதை படத்தில் காணலாம்.

கூடலூர், கூடலூர் நகரில் அமைந் துள்ள ஒட்டாண் குளக்கரை சாலை குண்டும், குழியுமாக காட்சி அளிப்பதால் விளை நிலங்களுக்கு சென்று வர விவசாயிகள் சிரமம் அடைந்து வருகின்றனர். இந்த குளக்கரையை சீரமைக்க அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும். ஒட்டாண்குளம் தேனி மாவட்டம், கூடலூர் நகரசபையின் மையப்பகுதியில் ஒட்டாண்குளம் அமைந்துள் ளது. மைத்தலை மண்ணடி யான் குளம் என்று இந்த குளம் அழைக்கப்படுகிறது. இந்த குளம் மூலம் கூடலூர் பகுதி யில் 406 ஏக்கர் நிலங்கள் இரு போக பாசன வசதி பெறுகிறது. இந்த குளத்தில் எப்போதும் நீர் நிறைந்து காட்சி அளிக்கும். இதனால் இந்த பகுதியில் வளர்க்கப்படும் நூற்றுக்கணக் கான கால்நடை களுக்கு குடி நீரா கவும் பயன் படுத்தப்படு கிறது. மேலும் விளைநிலங்களில் உள்ள பயிர்களுக்கு மருந்துகள் தெளிக்கவும் டிராக்டர் மற்றும் மாட்டு வண்டிகளில் கேன்கள் மூலம் தண்ணீரை நிரப்பி எடுத்து செல்கின்றனர். இந்த குளக்கரையில் உள்ள சிறிய அளவிலான சாலை முள்புதர் கள் மற்றும் செடி, கொடிகள் வளர்ந்து காட்சி அளிக்கிறது. மழைக்காலங் களில் இந்த கரைப்பகுதி தண்ணீர் தேங்கி நிற்பதால் இருசக்கர வாகனங் களில் வருவோர் அடிக்கடி கீழே விழுந்து செல்ல வேண் டிய அவலநிலை உள்ளது.

கோரிக்கை: பொதுப்பணித்துறைக்கு சொந்தமான இந்த குளத்துக் கரை தற்காலிகமாக கூட சீரமைக்கப்படவில்லை. இதனால் இந்த கரை வழியாக விளைபொருட்களை கொண்டு வருவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. எனவே பொதுப்பணித்துறையினர் உடனடியாக நடவடிக்கை மேற் கொண்டு சேதம் அடைந்துள்ள குளக்கரையை சீரமைக்கவும், செடி,கொடி, முள்புதர்களை வெட்டி அகற்ற வேண்டும் என்று விவசாயிகள் வலியுறுத்தி உள்ளனர்.

**பறிப்பதற்கு ஆட்கள் கிடைக்காததால் கொடியிலேயே அழுகும் திராட்சை பழங்கள்; விவசாயிகள் பாதிப்பு**



தேனி,

கம்பம் பகுதிகளில் திராட்சை பழங்கள்பறிக்க ஆட்கள் கிடைக் காத தால் கொடியிலேயே பழங்கள் அழுகி வீணாகி வருகின்றன. இதனால் விவசாயிகள் பாதிக்கப் பட்டு உள்ளனர்.

<u>திராட்சை சாகுபடி</u>

தமிழகத்தில் திராட்சை உற்பத்தி சாகுபடியில் சிறப் பிடம் பெற்ற தேனி மாவட் டத்தில் கம்பம், கூடலூர், சுருளிப்பட்டி, ராயப்பன்பட்டி, ஓடைப்பட்டி என மாவட்டம் முழுவதும் சுமார் 2 ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவில் திராட்சை சாகுபடி செய்யப் படுகிறது. இங்கு சாகுபடி செய்யப்படும் திராட்சை பழங்கள் தமிழகத்தின் பல் வேறு பகுதிகளுக்கும், கேரளா, ஆந்திரா, கர்நாடகா உள் ளிட்ட பிற மாநிலங் களுக்கும் ஏற்றுமதி செய்யப் படுகிறது.

கடந்த அண்டை விட இந்த ஆண்டு 10 சதவீதத்திற்கும் மேல் திராட்சை சாகுபடி பரப்பளவு குறைந்து உள்ளது. உரம், பூச்சி மருந்து விலை உயர்ந்த நிலையிலும் அதிக செலவு செய்து விவசாயிகள் திராட்சை சாகுபடியில் ஈடுபட்டு வருகின்றனர். கடந்த மாதம் மழை பெய்ததால் திராட்சை பழங்கள் கொடி யிலேயே வெடித்து வீணானது. இதனால் விவசாயிகள் பாதிக் கப்பட்டனர்.

<u>கொடியில் அழுகும் பழங்கள்</u>

தற்போது கம்பம், சுருளிப் பட்டி பகுதிகளில் திராட்சை பழங்கள் பழுத்து அறுவடை செய்யப்பட்டு வருகிறது. ஆனால் திராட்சை பழங்களை பறிப்பதற்கு முன்பு போல் தற்போது கூலி ஆட்கள் கிடைப்பது இல்லை. இதனால் பழங்களை குறிப்பிட்ட காலத் தில் பறிக்க முடியாமல் போகிறது. இதனால் ஏராள மான தோட்டங்களில் திராட்சை பழங்கள் கொடி யிலேயே அழுகிய நிலையில் கிடக்கிறது.

கூலி ஆட்கள் பற்றாக்குறை யால் கடந்த வாரத்தில் சுமார் 30 டன் திராட்சை பழங்கள் பறிக்காமல் வீணாகி உள்ளது. விலையும் போதிய அளவில் இல்லை. ஒரு கிலோ பன்னீர் திராட்சை ரூ.10-க்கு விவசாயி களிடம் இருந்து கொள்முதல் செய்யப்படுகிறது. இதனால் திராட்சை விவசாயிகள் நஷ்டம்அடைந்து உள்ளனர்.

**மேலூர் பகுதி விவசாயத்திற்கு தண்ணீர் திறக்கக்கோரிய வழக்கு: தமிழக அரசு விரைவில் பரிசீலனை செய்து தண்ணீர் திறக்க வேண்டும் மதுரை ஐகோர்ட்டு உத்தரவு**



மதுரை,

பெரியாறு அணையில் இருந்து மேலூர் பகுதி விவசாயத்திற்கு தண்ணீர் திறந்துவிடக்கோரிய வழக்கில், விரைவாக பரிசீலனை செய்து தண்ணீர் திறந்து விட வேண்டும் என மதுரை ஐகோர்ட்டு உத்தரவிட்டுள்ளது.

<u>பொதுநல மனு</u>

மேலூர் தாலுகா சென்னகரம்பட்டியை சேர்ந்தவர்கள் வக்கீல் திருமேனி, அமலன். இவர்கள் மதுரை ஐகோர்ட்டு கிளையில் தாக்கல் செய்த பொதுநல மனுவில் கூறி இருந்ததாவது:-

மதுரை மாவட்டம் மேலூர் பகுதியில் பெரியாறு-வைகை பாசன ஒரு போக விவசாயத்துக்காக கடந்த செப்டம்பர் மாதம் 25-ந் தேதி வைகை அணையில் இருந்து தண்ணீர் திறக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து மேலூர் பகுதிகளில் உள்ள 100 ஏக்கர் விவசாய நிலங்களில் விவசாய பணிகள் தொடங்கப்பட்டன. அணையில் இருந்து திறந்து விடப்பட்ட குறைந்த அளவு நீரை முறைவைத்து வினியோகித்து பயிர்கள் காப்பாற்றப்பட்டுள்ளன. இன்னும் 3 அல்லது 4 முறை பாசன நீர் வினியோகித்தால் பயிர் அறுவடைக்கு தயாராகி விடும்.

<u>விவசாயிகள் கவலை</u>

ஆனால் தற்போது வைகை அணையில் 1100 மில்லியன் கன அடி நீரும், பெரியாறு அணையில் 2,250 மில்லியன் கன அடி நீரும் இருப்பு உள்ளது. இந்த நீர் குடிநீருக்கு தேவைப்படுகிறது என்று கூறி அதிகாரிகள் பாசனத்துக்காக தண்ணீர் திறக்க மறுத்து வருகின்றனர். வைகை வரவு என்று வைகை அணையில் இருப்பதை கடன் வாங்கி பெரியாறு பாசன பகுதிகளில் வினியோகித்து திரும்பச் செலுத்திய முறைகளும் கடந்த காலங்களில் நடந்துள்ளன. ஆனால், அதை செய்ய அதிகாரிகள் மறுக்கிறார்கள்.

தற்போது தண்ணீர் திறக்காமல் பயிர்கள் கருகி விட்டால் பிற்காலத்தில் மழை பெய்தாலும் பயன் இல்லாமல் போய்விடும். பயிர்களை காப்பாற்ற பாசன நீருக்கு முன்னுரிமை வழங்க வேண்டும். விவசாயிகளின் தீவிர போராட்டம் காரணமாக 3 நாட்கள் தண்ணீர் திறந்து விடப்பட்டது.

ஆனால், அது பயிர்களை காப்பாற்ற போதுமானதாக இல்லை. தற்போது அணையில் இருப்பில் இருக்கும் நீரை முன்னுரிமை அடிப்படையில் பெரியாறு ஒரு போக பாசன விவசாயத்துக்கு வினியோகித்து பயிர்களை காப்பாற்ற வேண்டும் என்று தமிழக அரசின் தலைமை செயலாளர், பொதுப்பணித்துறை தலைமை என்ஜினீயர், மதுரை மாவட்ட கலெக்டர் ஆகியோருக்கு மனு கொடுத்தேன்.

தண்ணீர் திறக்க வேண்டும்

ஆனால், அவர்கள் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. தற்போது விவசாயத்துக்காக தண்ணீர் திறந்து விடவில்லை என்றால் விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்படுவர். எனவே, முல்லைப் பெரியாறு அணையில் இருந்து மேலூர் பகுதி விவசாயத்துக்காக உடனடியாக தண்ணீர் திறந்து விட உத்தரவிட வேண்டும்.

இவ்வாறு மனுவில் கூறப்பட்டு இருந்தது.

இந்த மனு நீதிபதிகள் பி.என்.பிரகாஷ், ஆர்.மகாதேவன் ஆகியோர் முன்னிலையில் விசாரணைக்கு வந்தது.

இந்த வழக்கில் அரசு தரப்பில் ஆஜரான கூடுதல் அட்வகேட் ஜெனரல் செல்லப்பாண்டியன் ஆஜராகி, பெரியாறு அணையில் போதிய தண்ணீர் இல்லை. எனவே இந்த மனு குறித்து பரிசீலனை செய்ய காலஅவகாசம் தேவைப்படுகிறது என தமிழக அரசு தரப்பில் கேட்டுக்கொண்டார்.

விரைவில் பரிசீலியுங்கள்

விசாரணை முடிவில், “இந்த மனு விவசாயிகளின் வாழ்வாதார பிரச்சினைகள் தொடர்பானது. ஆகையால் குறுகிய காலத்திற்குள் பரிசீலனை செய்து தண்ணீர் திறக்க வசதி செய்ய வேண்டும்” என உத்தரவிட்டனர். மேலும் இந்த வழக்கை வருகிற 2-ந் தேதிக்கு ஒத்திவைத்தும் நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

தி இந்து
தமிழால் இணைவோம்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## திண்டுக்கல்: அழிவின் விளிம்பில் சிறுமலை வாழைப்பழம்



திண்டுக்கல் மாவட்டத்தில் உற்பத்தியாகும் பாரம்பரியமிக்க சிறுமலை வாழைப்பழம் முடிகொத்து நோய் தாக்குதலால் படிப்படியாக சாகுபடிப் பரப்பு குறைந்து தற்போது அழிவின் விளிம்பில் உள்ளது.

திண்டுக்கல் மாவட்டத்தில் சிறுமலை, பழனி கீழ்மலை, பண்ணைக்காடு, மணலூர், காமனூர், தாண்டிக்குடி, கே.சி.பட்டி, பாச்சலூர், ஆத்தூர், ரெட்டியார்சத்திரம் மற்றும் பெருமாள்மலை பகுதியில் விவசாயிகள் 4,300 ஹெக்டேரில் வாழை சாகுபடியில் ஈடுபட்டுள்ளனர். இவற்றில், நல்ல ருசியும், மருத்துவ குணமும் கொண்ட சிறுமலை வாழைப்பழத்துக்கு சந்தைகளில் ஆண்டு முழுவதும் வரவேற்பு உள்ளது. இந்தப் பழம் மற்ற மலைவாழைப்பழங்களில் இருந்து முற்றிலும் மாறுபட்டது.

**சீதோஷ்ண நிலை**

இவ்வகை பழத்தை உலகில் வேறெங்கும் விளைவிக்க முடியாது. சிறுமலையின் மண்வளம், சீதோஷ்ண நிலையில் மட்டுமே இந்த மலைவாழைப்பழத்தை விளைவிக்க முடியும். அதனால், தனி ருசி, மணம் பெற்ற சிறுமலை

வாழைப்பழத்துக்கு சர்வதேச அளவில் தனி புவிசார் குறியீடு வழங்கப்பட்டுள்ளது. கடந்த 40 ஆண்டுகளுக்கு முன் 16 ஆயிரம் ஏக்கரில் சிறுமலை வாழை சாகுபடி நடைபெற்றது. 1971-ம் ஆண்டு, சிறுமலை வாழையில் அஸ்வினி பூச்சிகள் மூலம் முடிகொத்து வைரஸ் நோய் பரவியதால், இந்த ரக வாழை சாகுபடி அழிவைச் சந்தித்தது. தமிழ்நாடு தோட்டக்கலைத் துறை, வேளாண் பல்கலைக்கழகம், தமிழ்நாடு வாழை ஆராய்ச்சி மையம் ஆகியன இணைந்து சிறுமலையில் பல ஆய்வுகளை மேற்கொண்டு இந்த நோயைத் தடுக்க தீவிர நடவடிக்கை மேற்கொண்டன. ஆனால், இந்நோயை இன்றுவரை முற்றிலும் ஒழிக்க முடியவில்லை. தற்போதுவரை இந்த முடிகொத்து நோய் பரவிதான் வருகிறது.

அதனால், 16 ஆயிரம் ஏக்கர் சாகுபடி நடைபெற்ற சிறுமலை வாழை தற்போது வெறும் 750 ஏக்கரில் மட்டுமே நடக்கிறது. அதனால் இந்த வாழை அழிந்துவரும் பழங்களில் பட்டியலில் இடம்பெற்றுள்ளது. தற்போது சிறுமலை வாழைப்பழம் உற்பத்திக் குறைவால், மற்ற மலைகளில் விற்கப்படும் வாழைப்பழங்களை சிறுமலை வாழைப்பழம் என போலியாக விற்கப்படுகிறது.

இதுகுறித்து சிறுமலையைச் சேர்ந்த விவசாயி முத்தையா கூறியது;

கடந்த காலத்தில் சிறுமலை வாழையை முக்கியப் பயிராக சாகுபடி செய்தோம். வாழை மரங்களுக்கு இடையில் காபி, எலுமிச்சை மரங்களை ஊடுபயிராக நட்டோம். முடிக்கொத்து நோய் வந்தபின், எலுமிச்சை, காபியை முக்கியப் பயிராக சாகுபடி செய்கிறோம். வாழையை ஊடுபயிராக மட்டும் சாகுபடி செய்கிறோம். முடிகொத்து நோயை தடுக்க மருந்தே இல்லை. அந்நோய் வந்தால் மரத்தை அழிப்பதைத்தவிர வேறுவழி இல்லை. அந்நோயை பார்க்காமல்விட்டால் பக்கத்தில் உள்ள மரங்களுக்கு பரவிவிடும். வாழையின் தலைப்பகுதிகள் கொத்துகொத்தாக பஞ்சுபோல் ஆகிவிடும். தார் போடாது. காய் காய்க்காது. மஞ்சள் காமாலை நோய்க்கு சிறுமலை வாழைப்பழம் சிறந்த மருந்து. நல்ல வரவேற்பு, விலை கிடைக்கிறது.

ஆனால், அவற்றை உற்பத்தி செய்ய முடியவில்லை. அதனால், சிறுமலை வாழையை அழிவில் இருந்து காப்பாற்ற அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார். இதுகுறித்து தோட்டக் கலைத்துறை அதிகாரி ஒருவர் கூறியது: ஆய்வு பணி நடைபெற்று வருகிறது. உற்பத்தியை அதிகப்படுத்த திட்டங்கள் தயார் செய்து வருகிறோம் என்றார்.

### வெளிநாட்டினர் சதியா?

இதுகுறித்து வன உயிரினங்கள் ஆராய்ச்சியாளர் திண்டுக்கல் வனதாசன் எஸ்.எஸ்.ராஜேந்திரன் கூறியது:

பொதுவாக 1500 மீ. முதல் 2,500 மீட்டரில் விளையும் எந்த ஒரு பழத்துக்கும் தனி ருசி உண்டு. சிறுமலை 1,600 மீட்டர் உயரத்தில் உள்ளதால், இங்கு விளையும் சிறுமலை வாழைப்பழத்தின் ருசி வேறெங்கும் விளையும் பழத்திலும் கிடைக்காது. சிறுமலை வாழைப்பழத்தை சாப்பிட்டால் சளி பிடிக்காது. மலச்சிக்கலுக்கு நிவாரணியாக விளங்குகிறது. இந்தப்பழம் 18 நாள் வரை அழுகாது. தோல் கருக்குமே தவிர பழம் அழுகாது. இந்த வாழைப்பழத்தில் வைட்டமின் சி மற்றும் நுண்ணூட்டச்சத்து நிறைந்தது.

இந்தியாவைபோல், அமெரிக்கா, பிரேசில், தென்னாப்ரிக்கா, ஆஸ்திரேலியா, கிழக்கு ஆப்ரிக்கா, தைவான், பிலிப்பின்ஸ் நாடுகளில் வாழை சாகுபடி அதிகளவு நடக்கிறது. மற்ற நாடுகளை காட்டிலும், தமிழகத்தில் விளையும் சிறுமலை மலைவாழைப்பழத்துக்கு தனி மவுசு உண்டு. அதனால், சிறுமலை வாழைப்பழத்தின் மவுசைக் குறைக்க வெளிநாட்டினர், வைரஸ் மூலம் காற்றில் பரவும் முடிகொத்து நோயை பரப்பி இருக்கலாம் என்ற சந்தேகம் நீடிக்கிறது. அதனால், அரசு தனிக்கவனம் எடுத்து அழியும் சிறுமலை வாழையைக் காப்பாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

**பஞ்சாமிர்தம் தட்டுப்பாட்டுக்கு சிறுமலை வாழை காரணமா?**

பழனி கோயிலில் பக்தர்களுக்கு வழங்கப்படும் பஞ்சாமிர்தம் கடந்த காலத்தில் சிறுமலை வாழைப்பழத்தைக் கொண்டே தயார் செய்யப்பட்டதால் நல்ல சுவையுடன் இருந்தது. தற்போது சிறுமலை வாழைப்பழத்துக்கு தட்டுப்பாடு ஏற்பட்டதால் பண்ணைக்காடு, பழனி கீழ்மலை விருப்பாச்சி வாழைப்பழங்களைக் கொண்டு பஞ்சாமிர்தம் தயார் செய்யப்படுகிறது. அதனால், முன்பிருந்த சுவை தற்போது பஞ்சாமிர்தத்தில் இல்லை எனக் கூறப்படுகிறது. சிறுமலை வாழைப்பழம் 18 நாள் வரை அழுகாது என்பதால் முன்கூட்டியே கூடுதல் பழங்களை வாங்கி வைத்துக்கொண்டு தட்டுப்பாடு இல்லாமல் பஞ்சாமிர்தம் தயாரித்து வழங்கப்பட்டது. மற்ற வாழைப்பழங்கள் 3 நாள், 5 நாள் வரைதான் வைக்க முடியும். இந்தப் பழங்களை கூடுதல் நாள் வைக்க முடியாததால், அடிக்கடி பஞ்சாமிர்தத்துக்கு தட்டுப்பாடு ஏற்படுகிறது.